விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 07 புதன்கிழமை (21.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## பரபரப்பு தணிந்தது; சபை நாளை கூடுகிறது

# சுமுகமாக சபை இயங்க அனைவரும் உதவுங்கள்

## பொது அமைப்புகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண அரசு எதிர்காலத்தில் எதுவித குழப்பமுமின்றி மிகச் சிறப்பாக இயங்கி மக்களுக்கு உச்சமான சேவையை வழங்க வேண்டும் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

(04-ம் பக்கம் பார்க்க...)

## வடக்கு சபை; அமர்வு நாளை

(யாழ்ப்பாணம்)
பல அரசியல் குழப்ப நிலைகளுக்கு மத்தியில் ஏற்படுத்தபட்ட சமரசத்துக்கு பின்னதாக பாரிய எதிர்பார்ப்புடன் வடக்கு மாகாண சபை அமர்வு 23

## ஆளுநர் இன்று யாழ். திரும்பல்

(யாழ்ப்பாணம்)
வட மாகாண சபையின் அரசியல் நடவடிக்கைக்காக கொழும்பு விரைந்த வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மீண்டும் இன்று யாழ்ப்பாணம் திரும்பவுள்ளார். 04

## பொது பல சேனா நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)
வட மாகாண முதல்வருக்கும் வட மாகாண சபைக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என பொது பல சேனா கருத்துத் 23

## விக்னேஸ்வரனுடைய சேவை வடக்கில் தொடர வேண்டும்

### முஸ்லிம் சமூகத்தினருடன் முதல்வர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ நீதியும் நியாயமும் உள்ள உன்னதமான மனிதரான வடக்கு முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனுடைய சேவை வடக்கில் தொடர்ச்சியாக நிலைத்து நிற்க வேண்டும் என 23



## குருகுலராசா இராஜினாமா; கடிதம் முதல்வரிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)
வட மாகாண கல்வி அமைச்சர் த.குலகுலராசா தனது இராஜினாமா கடிதத்தினை நேற்றைய தினம் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கையளித்துள்ளார்.
நேற்று மாலை 5.30 மணியளவில் முதலமைச்சர் வாசஸ்தல 23



## இரா. அதிகாரிகள் அறுவருக்கு பிணை

(கொழும்பு)
ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் ஆறு பேரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
2008ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி ஊடகவியலாளர் கீத் நொயார் கொழும்பில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக 24

## டெங்கு நோயை கட்டுப்படுத்த அவுஸ். பக்டீரியா

(கொழும்பு)
தீவிரமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக அவுஸ்திரே 24

## பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட அமை. அனுமதி

(கொழும்பு)
அரச மற்றும் தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்க அமைச்ச 24

## கல்வி, விவசாய அமைச்சுக்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்று பொறுப்பேற்கிறார்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி ஆகிய இரு அமைச்சுக்களை இன்றைய தினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தற்காலிகமாக பொறுப்பேற்கிறார்.
வட மாகாண அமைச்சர்கள் நால்வருக்கும் எதிராக நடைபெற்ற ஊழல் மோசடி குற்றச்சாட்டு விசாரணையைத் தொடர்ந்து விசாரணைக் குழுவின் 23

## குற்றமிழைத்த இராணுவம்; தண்டிக்கப்பட வேண்டும்!

### சிங்கள சிரேஷ்ட ஊடகவியலாளர் வலியுறுத்து

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியில் தோற்கடித்த ஒரே காரணத்திற்காக குற்றங்களை இழைத்த இலங்கை இராணுவத்தினரை தண்டிக்காமல் விடுதலை செய்யக்கூடாது என்று வலியுறுத்தியுள்ள தென்பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் போத்தல ஜயந்த, பொது 23



## செல்போனுக்கு தடை விதிப்பு!

(கொழும்பு)
அமைச்சரவைக் கூட்டங்களுக்கு செல்போன்களை எடுத்து வர வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களுக்கு நேற்று அறிவித்துள்ளதாக 04

## மண்டைதீவு கடலில் சடலம் மீட்பு

(மண்டைதீவு)
மண்டைதீவில் இருந்து கடந்த மூன்று தின 04

## நாட்டை விட்டு வெளியேறுவோம்; பொது பல சேனா அறிவிப்பு!

(கொழும்பு)
பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் மீது கை வைத்தால் நாட்டில் மீண்டும் அசாதாரண நிலைமை ஏற்படும் என்றும் என்று பேரினவாத பௌத்த அமைப்புக்களில் ஒன்றான ராவணா பலய 04

### "வாக்குறுதி அளித்தால் ஞானசார தேரர் நாளை நீதிமன்றில் ஆஜராவார்"

## மனி. உரி. கண்காணிப்பகம் நீதியமைச்சருக்கு கண்டனம்

(கொழும்பு)
மத அடிப்படையில் சிறுபான்மையினராகக் காணப்படும் சமூகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் வெளிப்படையான கருத்துக்களை முன்வைத்தமைக்காக, சட்டத்தரணி ஒருவர் மீது, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விடுத்த எச்சரிக்கைக்கு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், கண்டனம் வெளியிட்டுள்ளது.
இந்தச் சம்பவம், இலங்கையில் அண்மைக் காலத்தில் முஸ்லிம்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் முழுமையாக விசாரணை மேற்கொண்டு, வழக்குத் தொடர்வதில், அரசாங்கம் அடைந்துள்ள தோல்வியைக் காட்டுவதாகவும், அக்கண்காணிப்பகம் தெரிவித்து 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் துறைமுகத்தில் பிரெஞ்சு போர்க் கப்பல்

பிரெஞ்சு கடற்படையின் இரண்டு பாரிய போர்க் கப்பல்கள் நல்லெண்ணப் பயணமாக கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

மிஸ்ரால் (Mistral) எனப்படும் பாரிய தரையிறக்க மற்றும் உலங்குவானூர்தி தாங்கி கப்பலும் கோர்பெட் (Courbet) என்ற போர்க்கப்பலுமே நேற்று கொழும்பு வந்துள் ளன.

மிஸ்ரால் கப்பலில் 56 அதிகாரிகள் உள் ளிட்ட 431 கடற்படையினரும் போர்பெட் கப்பலில் 18 அதிகாரிகள் உள்ளிட்ட 157 கடற்படையினரும் உள்ளனர்.

வரும் ஜூன் 26ஆம் திகதி வரை



பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் இரண்டும் கொழும்பில் தரித்திருக்கும். இதன்போது, இலங்கை கடற்படையுடன் இணைந்து பல் வேறு நிகழ்வுகளிலும் பிரெஞ்சுக் கடற்படை யினர் பங்கேற்கவுள்ளனர். (செ-11)

## கேள்விக்கான கோருதல்

### விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம்

1. தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, சார்பில் விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணை யில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப் பினும் வியாபார பதிவினை வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.
3. கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருப்பவரும், 04/2016 (i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

    விளையாட்டுத் திணைக்களம்,
    வடமாகாணம், செம்மணி வீதி,
    நல்லூர்,
    யாழ்ப்பாணம்.
    Tel: 021-2215054
    Fax: 021-2054074

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 21.06.2017 முதல் 12.07.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
7. கேள்விகள் 13.07.2017ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விளையாட்டுத் திணைக்களம், வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் விளையாட்டுத் திணைக்களம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 04.07.2017 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. கேள்வி பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல. | வேலை விபரம் | மீளளிக் கப்படாத தொகை (ரூபா) | மதிப் பீட்டுத் தொகை (மில் லியன்) | கேள்வி செல்லு படியாகும் காலம் (நாட்கள்) | ஒப்பந்த காலம் (நாட் கள்) | தேவை யான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப் படும் காலம் |
| PSDG/ SPO/ 2017/ 01 | சங்கானை யில் பூப்பந் தாட்டத் திடல் நிர்மாணித்தல் | 2,500.00 | 7.03 | 77 | 120 | C7 (கட்டிடங்கள்) | 74,000.00 | 26.10. 2017 வரை |


தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
விளையாட்டுத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.

(C-8839)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.05.2017 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி சிவப்பிரகாசம்
(ஆசாரியார்)




அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 22.06.2017 வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அண்ணாசிலையடி
கரணவாய்,
கரவெட்டி.

(C-8841)

இங்ஙனம்,
குடும்பத்தினர்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.05.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கதிரவேலு இரத்தினசிங்கம்
(இளைப்பாறிய விதானையார்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.06.2017) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவின் போது உதவி ஒத்தாசைகள் வழங்கியோர், ஆறுதல் கூறியோர், தொலைபேசி மூலம் கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபத்தை தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவனில்லை,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(C-8842)

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத் துயருடன்

# 6 ஆம் மாத நினைவலைகள்

## அமரர் வர்ணியா கிருஷ்ணகுமார் (விதுனா)

தாயின் மடியில் : 13.06.1999
காலனின் பிடியில் : 21.12.2016



ஆனியில் அவதரித்த எங்கள் ஆனிமுத்தே!
அன்பின் இலக்கணமே - விதுனா!
மழலை மொழிபேசி குழந்தைச் சிரிப்போடு - என்றும்
மலர்ந்திருக்கும் உன் வதனம் காணும் போதெல்லாம்
மனக்கவலை எம்மைவிட்டு மலையேறிப்போகுமடி
செல்லக் குறும்புகளாய் நீ செய்யும் சேட்டைகளில்
சிக்கித் திளைத்திருந்த உறவுகளின் விழிகளிலே
செந்நீர் வழிந்தோடச் செய்ததேனோ? கூறடி!

தாயாய் மட்டுமன்றி தந்தையாயும் தமையனாயும் - உனை
தாங்கி நின்ற தாயவளின் கதறலைப் பாரடி
தன் பிள்ளை வாழ்வுக்காய் தன்னையே தந்தவளை
தனியே தவிக்கவிட்டுச் சென்றதேனோ? கூறடி!
பெருகும் விழிநீரோடு உருகும் மெழுகுகளாய்
பெரியம்மாவையும் பெரியப்பாவையும் பாரடி
மனதில் இடி விழுந்து மதிகலங்கிக் கதறுகின்ற
மாமன்மாரையும் மாமிமாரையும் பாரடி
அம்புபட்ட மானைப்போல அன்றாடம் துடித்திடும்
அண்ணன்மாரை அக்காமாரைப் பாரடி
அழுது அழுது விழிமை கரைந்து போன - உன்
மைத்துனன் மைத்துனிகளையும் பாரடி
நாளெல்லாம் உன்னோடு கூடிமகிழ்ந்த நண்பர்களும்
காலமெல்லாம் உன்னோடு கலந்திருந்த உறவுகளும்
உற்றவரும் மற்றவரும் உறவினரும் அயலவருமென
அத்தனை உறவுகளையும் மொத்தமாய்த் தவிக்கவிட்டு
காலன் உனைக் கவர்ந்து போனது ஏனோ...?

ஆறு மாதங்கள் ஆகியென்ன ஆயிரமாயிரம் மாதங்கள் ஆனாலும்
ஆறாதம்மா! எம் துயர் என்றும் மாறாதம்மா!
நீ மரணிக்கவில்லையம்மா! விதுனா நீ மரணிக்க வில்லையம்மா!
மாறாத நினைவாகி எம் மனங்களிலே வாழ்கின்றாய் - என்றும்
மாறாத நினைவாகி எம் மனங்களிலே வாழ்கின்றாய்!!

**என்றும் உன் நினைவுடன்**
**குடும்பத்தினர்**

**155, கனகாம்பிகைக் குளம்,**
**கிளிநொச்சி.**

(C-8833)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மன உணர்வுகளை மதித்து தமிழரசுக் கட்சி செயற்படவில்லை!

## ஐங்கரநேசனை மட்டும் இலக்கு வைத்தவர்கள் இன்று தம்மவர்களையும் இழந்து விட்டனர் - ம.தியாகராசா

(பன்க்கன்குளம்)

தமிழ் மக்கள் மனங்களிலே ஏற்பட்ட உணர்வுகளுக்கு அமைவாக தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வட மாகாணத்திலே செயற்படவில்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை சேர்ந்த வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று வவுனியாவிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே உறுப்பினர் தியாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது,

வடமாகாண சபையிலே நடந்து கொண்டிருக்கின்ற பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்ததையிட்டு நாங்கள் மிகவும் சந்தோசம் அடைகின்றோம். பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பாடுபட்ட கட்சி தலைவர்கள், மதகுருமார்கள் எல்லோருக்கும் நன்றி கூற கடமைபட்டிருக்கின்றேன்.

வட மாகாண சபையை பொறுத்தமட்டிலே உங்களுக்கு தெரியும் புதிதாக கொண்டுவரப்பட்ட இந்த வட மாகாண சபையிலே வட மாகாணத்திலே இருக்கின்ற மக்கள் எல்லோரும் ஒருமித்த குரலோடு, ஆதரவோடு, உணர்வோடு வாக்களித்தார்கள். மாகாண சபையினூடாக ஏதாவதொரு விடிவை பெறவேண்டும என்பதற்காக. 2013ஆம் ஆண்டு மாகாண சபைக்கு உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்தார்கள்.

எனினும் வடக்கு தமிழ் மக்களிடையே இருக்கின்ற மக்கள் மனங்களிலே ஏற்பட்ட உணர்வுகளுக்கு அமைவாக உறுப்பினர்கள செயற்படவில்லை என்பது தான் என்னுடைய கருத்து.

என்னை பொறுத்தமட்டிலே வவுனியா மாவட்டத்திலே தெரிவு செய்யப்பட்ட நான எனது பிரதேசம் என்று உண்மையிலே கூடுதலாக விவசாய பிரதிநிதித்துவத்தை கொண்ட மக்கள் வாழ்கின்ற பிரதேசம். இதே போன்று

### ஆளுநர் இன்று ...

கடந்த சில நாட்களாக நீடித்த வட மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு, அதனை தொடர்ந்து முதலமைச்சர் அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் போன்ற பிரச்சினைகளின் காரணமாக மத்திய அரசின் ஆலோசனைகளை பெற கொழும்பு சென்ற வட மாகாண ஆளுநர் மீண்டும் இன்றையதினம் காலையில் யாழ். திரும்புகின்றார்.

வட மாகாண சபையின் அமைச்சர்களாக விருந்த பொ.ஐங்கரநேசன், த.குருகுலராசா ஆகியோரால் இராஜினாமா செய்யப்பட்ட விவசாய அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தற்காலிகமாக பொறுப்பேற்று கொள்ளவுள்ளதால் அவருடைய சத்திய பிரமாணத்தையும் இன்று மாலை ஆளுநர் செய்து வைப்பார் என கொழும்பிலுள்ள ஆளுநர் அலுவலகமூடாக அறியக்கிடைத்துள்ளது. (செ-11)

### நாட்டை விட்டு ...

அமைப்பின் தலைவர் மாகல்கந்தே சுதத்த தேரர் பகிரங்க எச்சரிக்கை ஒன்றை விடுத்துள ளார்.

ஞானசார தேரருக்கு உயிர் பாதுகாப்பு உத்தரவாரம் அளிக்கும் பட்சத்தில்தான் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாவார் என்றும் மாகல்கந்தே சுதத்த தேரர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா அமைப்பிற்கு ஆதரவாக செயற்பட்டுவரும் ராவணா பலய அமைப்பும், பொதுபல சேனாவும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதில் பொதுபல சேனா அமைப்பின் ஏற்பாட்டாளர் டிலந்த வித்தானகே, ராவணா பலய அமைப்பின் தலைவர் மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் பொதுபல சேனாவின் செயற்பாட்டாளர் பிக்கு ஒருவரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய ராவணா பலய அமைப்பின் தலைவர் மாகல்கந்தே சுதத்த தேரர் ஞானசார தேரருக்கு ஏதும் பாதிப்பு

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களிலே கூடுதலானவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். அவர்களுடைய தேவைகள் விருப்பங்கள் எல்லாம் வேறு விதமாக அமைந்திருக் கின்றது.

அந்த வகையிலே அந்த தேவைகளை இனங்கண்டு அந்த தேவைகளை நிவர்த்தி செய்து கொடுப்பது தான் இந்த உறுப்பினர்களுடைய கடமை. அதை விட்டு இந்த உறுப்பினர்கள் ஏனோ தானோ என்று மாகாண சபையிலே நடந்து கொள்வதும், உறுப்பினர்களுடைய செயற்பாடு மக்கள் மத்தியிலே ஒரு அதிர்ப்தியை ஏற்படுத்தி கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

எங்களுடைய மாகாண சபையிலே இருக்கின்ற அமைச்சர்களுடைய ஊழல் மோசடிகள போன்ற விசாரணைகள் ஏற்பட்டமை உங்களுக்கு தெரியும். என்னை பொறுத்தமட்டிலே இந்த அமைச்சர்கள் செய்கின்ற ஊழல் மோசடிகளுக்கு அப்பாலே அமைச்சர்களுடன் பல தடவைகளுக்கு அப்பாலே மாகாண சபையிலும் சரி வெளியிலும் சரி நான் அவர்களுடன் ஆதங்கப்படிருக்கின்றேன், அவர்களுடன் சண்டை பிடித்திருக்கின்றேன். அவர்களுடன பல கருத்து மோதலில் கூட ஈடுபட்டிருக்கின்றேன். காரணம் என்னவென்று சொன்னால் எங்களுடைய வவுனியா மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அவர்கள் செய்ய தவறிவிட்டார்கள். என்ற சந்தர்ப்பத்திலே தான் நான் அவர்களுடன் சண்டை பிடித்திருக்கின்றேன்.

அந்த வகையிலே எந்தவொரு அமைச்சர்கள் மீதும் நான் ஊழல் மோசடி குற்றம் சாட்டவும் இல்லை. குற்றச் சாட்டை நிரூபிக்கவும் இல்லை. குற்றச் சாட்டு செய்தவர்களை விசாரணை செய்யவும் என்ற கருத்தை கூட சபையில் நான் முன்வைக்கவில்லை. இந்த குற்றச் சாட்டை முன்வைத்தவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற

ஏற்பட்டால் இந்த நாடு மீண்டும் பழைய நிலைமைக்கே திரும்பும். அபிவிருத்திகள் தடைப்படும். மீண்டும் ஒருமுறை இறந்த காலத்தை நோக்கி நகரும். நாட்டில் நெருக்கடி ஏற்படும். எனவே ஞானசார தேரரை பாதுகாப்பதே எமது பிரதான இலக்காகும். விசாரணைகளில் எமக்கு வாக்குறுதி ஒன்று அளிக்கப்படும் பட்சத்தில் ஞானசார தேரர் மன்றில் முன்னிலையாவார். கலபொட அத்தே ஞானசார தேரருக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் நாளை மறுதினம் (நாளை) உயர்நீதி மன்றத்தில் இடம்பெறும் மனு மீதான விசார ணைக்கு சிலவேளை அவர் முன்னிலையாவார் என்று நம்புகிறோம். அவரது உயிர பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால்தான் அவர் முன்னிலையாவார். இந்த நற்செய்தியைக் கேட்டவுடன் அரசியல்வாதிகளுக்கு இப்போது கூற முடியாத இடங்களில் எல்லாம் சிரிப்பு வரும் என்றார்.

இதேவேளை இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த மாகல்கந்தே சுதத்த தேரர், ஞானசார தேரர் முன்வைத்துவரும் சிங்கள இனத்தின் பிரச்சினைகளை செவிமடுத்து தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் நாட்டை விட்டு வெளியேறவும் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

ஞானசார தேரர் முன்வைத்துள்ள பிரச்சினைகளை நாளை முதல் பேச்சுநடத்தி தீர்வு கண்டால் ஞானசார தேரர் உட்பட நாங்கள் மௌனிப்பதுடன் இலங்கையில் இருக்க வேண்டாம் என்று கூறினாலும் நாட்டைவிட்டு வெளியேற நாங்களும் தயார். கிழக்கில் இடம பெறும் புராதன சொத்துக்கள் அழிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் வாயை மூடிக்கொள்வோம். ஆனால் சிங்கள பௌத்த மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இதுகுறித்து பேசாமல் ஞானசார தேரரை தூற்றுகின்றனர். கிழக்கில் இடம்பெறும் இன சுத்திகரிப்பைப் பற்றி எவரும் பேசுவதில்லை. அதைவிடுத்து இப்பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பும் பிக்குகள் மீதே நமது பிரிவினர தாக்குகின்றனர். [illegible] த்து ஊடகங்களிலும் மக்களும் ஞானசார என்ற நாமத்தை உச்சரிக்கின்றனர். தவிர, அவர

தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தான் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்கள்.

அந்த வகையில் தான் அவர்கள் தனியே ஐங்கரநேசனிடம் இந்த குற்றச்சாட்டுகளை கொண்டு வந்து அவர்களே ஊழலை கண்டு பிடித்து அவரையே தனியாக நீக்குவதற்கு கொண்டு வந்த செயற்பாடுகளில் தான் நாங்கள் முரண்பட்டோம். ஏனென்று சொன்னால் இந்த மாகாண சபையிலே இருக்கின்ற நான்கு அமைச்சர்கள், முதலமைச்சர் ஆகிய ஐந்து பேரும் ஒருமித்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே ஒரு அமைச்சரை மட்டும் தனியாக ஊழல் மோசடி செய்கின்றார். என்ற பிரச்சினையை நாங்கள் கொண்டு வரக்கூடாது என்று நான் வாதாடினோம்.

அதற்கு அமைவாக எங்களுடைய கட்சியிலே அங்கம் வகிக்கின்ற அனைத்து அங்கத்தவர்களும் ஒட்டு மொத்தமாக தான் எங்களுடைய கருத்துக்கு உடன்பட்டு நான்கு அமைச்சர்களுக்கும் ஊழல் மோசடி விசாரணை செய்வதானால் நான்கு அமைச்சர்களுக்கும் சேர்த்து செய்ய வேண்டும். ஒரு அமைச்சருக்கு மாத்திரம் செய்ய ஏற்கவும் மாட்டோம் இதற்கு நாங்கள் உடன்படவும் மாட்டோம். என்று நாங்கள் எதிர்த்து நின்றோம்.

அந்தவகையில் தான் தனியாக அமைச்சர் ஐங்கரநேசனை விலக்க வேண்டும் என்று செயற்பட்ட இந்த தமிழரசு கட்சி உறுப்பினர்கள் இன்று தங்களுடைய கட்சியிலே இருக்கின்ற அமைச்சர்களையும் விலக்க வேண்டிய சந்தர்பத்திலே அவர்கள் வந்திருக்கின்றார்கள். இது அவர்களாலே ஏற்பட்ட பிரச்சினை என்று தான் நான் கூற விரும்புகின்றேன்.

அமைச்சர்களுடைய மாற்றம் என்பது அமைச்சர்களுடைய ஊழல் மோசடி என்பது ஒரு தேவையில்லாத பிரச்சினை அவர்களே கொண்டு வந்து அவர்களே ஊழல் இல்லை பிரச்சினை இல்லை என்று திரும்பவும் மற்ற பக்கமாக வாதாடிக்கொண்டிருக்கின்ற இந்த கூறவரும் விடயத்தை பற்றி பேசுவதி ல்லை. ஞானசார தேரரை கைது செய்வது குறித்து மட்டுமே பேசுகின்றனர். வாக்களித்த சிங்கள மக்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய இந்த அரசியல்வாதிகளின் செயற்பாட்டினால் சிங்களவர்கள் மற்றும் புராதன சொத்துக்களுக்கு நடப்பது என்ன என்பது குறித்து இப்போதாவது சிந்தியுங்கள். முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு சவால் ஒன்றை விடுக்கின்றேன். முடிந்தால் கிழக்கில் புராதன சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன, கிழக்கில் விகாரை காணிகள ஆக்கிரமிக்கப்படுகின்றன, நாட்டில் முஸ்லிம் இனவாதங்கள் இருப்பதாக கூற முடியுமா? இல்லை அவர்கள் கூறமாட்டார்கள். ஏனென்றால் இவர்கள் அனைவரும் அடுத்த அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சிறுபான்மையினரின் வாக்குகளுக்காக ஏங்கிக்கொண்டிருக கின்றார்கள் என்று தெரிவித்தார். (செ-11)

### சுமுகமாக சபை...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில் லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி கொண்டு வந்ததையடுத்து வடக்கு மாகாணத்தில் அரசில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து மதத் தலைவர்கள் இது விடயத்தில் தலையிட்டு ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையில் முரண்பாடுகள் ஏற்படாதவாறு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நடந்த சம்பவங்களில் இருந்து கற்றறிந்து மக்களுக்குஉச்சசேவையை வழங்கவடக்குமாகாண சபையின் சகல உறுப்பினர்களும் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ள பொது அமைப்புக்கள்,

[illegible] மாகாண சபையின் திறமையான இயங்கு நிலைக்கு அரசியல் கட்சித் தலைவர்களும் ஊடகங்களும் பொதுமக்களும் தமது




உறுப்பினர்களுடைய செயற்பாடு என்பது புரிய முடியாத புதிராகவே இருக்கின்றது.

ஆகவே நான் கூறுவது என்னவென்று சொன்னால் இந்த அமைச்சர்களுடைய செயற்பாடு உண்மையாகவே சரியோ, பிழையோ என்பதற்கு அப்பால் இனி வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நான்கு கட்சிகளும் ஒற்றுமையாக இருந்து மக்கள் என்ன நோக்கத்திற்காக வாக்களித்தார்களோ அந்த மக்களுடைய தேவைகளை இனங்கண்டு செய்வதற்கு நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது தான். மக்கள் என்னுடன் இப்படியான ஆதங்கத்தை இரண்டு வாரமாக பகிர்ந்து கொண்டார்கள். இதனால் தான் நான் இப்படியாக ஒரு ஊடக சந்திப்பை ஒழுங்குபடுத்தினேன்.

தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் மற்றைய கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களோடு இணைந்து எங்களுக்கு வாக்களித்த இந்த மக்களுக்கு நல்ல தொரு செயற்பாட்டை செய்ய வேண்டும். நல்ல தொரு வேலைத்திட்டத்தை செய்து மக்களுடைய தேவைகளை நிறைவேற்றி கொடுக்க வேண்டும்என வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா மேலும் தெரிவித்தார். (செ-250)

காத்திரமான வகிபங்கை வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளன.

இதேவேளை வடக்கு மாகாண அரசிலில் ஏற்பட்டிருந்த குழப்பநிலைகள் தணிந்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில்,

நாளை வடக்கு மாகாண சபை கூட இருப்பது குறிப்பிடத்தக்கது.

நாளைய தினம் வடக்கு மாகாண சபை கூடும் போது, உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான சிந்தனையுடன் செயற்படுவர் என நம்புவதாகவும் பொது அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன. (செ)

### மண்டைதீவு...

ங்களுக்கு முன்னர் கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவர் காணாமல்போன நிலையில் நேற்றைய தினம் கடலில் சடலமாக மீட்கப் பட்டார்.

கடற்றொழிலுக்குத் தனிமையில் சென்ற இவர் காணாமல்போன நிலையில் அவர் சென்ற படகு ஏற்கெனவே மீட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ந)

### செல்போனுக்கு...

தெரியவருகிறது.

இது உத்தரவில்லை மாறாக அறிவிப்பு மாத்திரமே எனவும் ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் கூறுகின்றன.

சில அமைச்சர்கள், அமைச்சரவைக் கூட்டத்தின் போது செல்போன்களில் குறுந்தகவல்களை அனுப்பும் பழக்கத்தை கொண்டிருப்பதால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எது எப்படி இருந்த போதிலும் இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஒன்றின் தகவல்களை எதிர்க்கட்சிக்கு வழங்க அமைச்சர் ஒருவர் தனது செல்போனை அமைச்சரவைக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே செயற்பட வைத்து வந்துள்ளதாக கடந்த காலங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தன. (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பங்களாதேஷின் நிதியுதவி ஜனாதிபதியிடம்

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரண மளிப்பதற்காக பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனா அம்மையாரின் வாக்குறுதிக்கமைய வழங்கிய நிதியுதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் ரியாஸ் ஹம்துல்லாவால் உரிய காசோலை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தமது நாட்டில் அனர்த்தம் ஏற்பட்டுள்ள நிலையிலும் அயலிலுள்ள நட்பு நாடுகளுக்கு பங்களாதேஷ் வழங்கும் உதவிகளை பாராட்டிய ஜனாதிபதி. அது இருதரப்பு உறவுகளின் சிறப்பான பண்பாகுமென தெரிவித்தார்.

இலங்கைக்கும் பங்களா தேஷுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் அண்மைக்காலத்தில் முன்னேறியுள்ளதுடன், அந்த உறவுகளை அனைத்து துறைகளிலும் உயர்த்துவது பங்களாதேஷின் குறிக்கோளாகும் என்று பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். (இ-3)

## ரோலர் படகு மீன்பிடியைக் கண்டித்து

# நெடுந்தீவு மீனவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



இழுவைப்படகு மீன்பிடியால் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு பிரதேச மீனவர்கள் பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக்காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் இழுவைப்படகுகளால் எமது குடும்பங்கள் பட்டினிச்சாவில், எமது எதிர்காலம் என்னவாகும்? என எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் நெடுந்தீவு மீனவ சங்க சமாசத் தலைவர் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், குருநகர், பாசையூர், நாவாந்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் நுழைந்து இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதனால் கடல்வளம் அழிக்கப்படுகின்றது. எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

கடற்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இது தொடர்பில் பல கவனயீர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டும் உரிய தரப்பினரிடமிருந்து எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இழுவைப்படகின் தாக்கத்தினால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்து, இதனால் கவனயீர்ப்பில் ஈடுபட்டுள்ளோம். எனவே இது தொடர்பில் உரியவர்கள் உடனடித் தீர்வைப் பெற்று தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-8)

# புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை புதிய தேர்தல் முறையின் கீழ் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆளும் கட்சியில் உள்ள ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன ஒருமனதாக இந்த தீர்மானத்திற்கு வந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவினரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பி லும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் விரிவாக பேசப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாரத்தை பகிர்தல் உள்ளிட்ட பிரதான சில விடயங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணங்கியுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் இது தொடர்பில் மேலும் பேசுவதற்கு யோசனை முன் வைக் கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தி விரைவில் இறுதி இணக்கப்பாட்டிற்கு வர இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி!

கெகிராவ - மரதன் கடவல பகுதியில் தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேலும், துப்பாக்கிச் சூட் டுக்கு இலக்கான. மரதன்கடவலை - செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே பலியாகியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, சிலர் சேர்ந்து கஹடகெஸ்வெவ பகுதி க்கு வேட்டைக்கு சென்ற போதே, இவ்வாறு துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளதாக, இந்த விடயம் குறித்து பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ள இளைஞர் ஒருவர் கூறியுள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கெக்கி ராவ பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

# ஐ.தே.க.-சு.க. இடையே ஒப்பந்தம் நீடிக்கும் நல்லாட்சி தொடரும்

## அமைச்சர் எரான் தெரிவிப்பு



தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையிலான ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் நிதி இராஜா ங்க அமைச்சருமான எரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷவின் தேவைக்கேற்ப எம் மால் தேர்தலை நடத்த முடி யாது. எந்தவொரு தேர்த லுக்கு முகங்கொடுப்பதற்கும் தயாராக உள்ளோம். இதன் படி விரைவில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிட்டகோட்டேயில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போது நாட்டில் நிலை கொண்டுள்ள பொருளாதார பிரச்சினை தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது. தற்காலிக பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். நிரந்தர தீர்வை பெற வேண் டுமாயின் ஸ்திர திட்டங்களை தயாரிக்க வேண்டும். குறுகிய கால நோக்கத்திற் காக தீர்மானங்களை எடுக்கக் கூடாது.

நீண்ட கால திட்டத்திற்கு நாம் செல்லவுள்ளோம். வரவு - செலவுத்திட்ட பற் றாக்குறையை குறைத்துக் கொள்ள வேண்டும். கடன் பெறுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும். நேரடி முதலீடுகளின் மூலமாக இலாபம் அடைய முடியும்.

அதற் கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் ஏற்றுமதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இலங்கையில் இருப்பது சிறிய சந்தையாகும். எமக்கு பாரிய சந்தை தேவையாகும். அத்துடன் வீண் செலவீனத் தையும் குறைத்துக் கொள்ள வேண்டும். அரச நிறுவனங்களின் நட்டத்தை முழுமையாக குறைத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் மக்களுக்கே அது வந்து சேரும்.

பொருளாதாரத்தில் நிலை யான தன்மையை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

வரிக் கொள்கையில் நிலையான தன்மையை கொண்டு வர வேண்டும். பாராளுமன்றத் தில் புதிய வரிக் கொள்கையை சமர்ப்பிப்போம். அடுத்த மாதம் அது சமர்ப்பிக்கப்படும். இதன் போது விவாதம் செய்யப்படும். நிலையான தன்மையை ஏற்படுத்தும் நோக்குடனேயே புதிய வரிக் கொள்கை தயாரிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் தேர் தலைமையமாக வைத்தே பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அரசியல் வழிப்போக்கில் இருந்து சீனா. வியட்நாம் போன்ற நாடுகள் முழு மை யாக மாறியுள்ளன.

மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டத்திற்கு செல்ல வேண்டும். எமக்கு முகாமைத்துவம் தொடர்பில் பெரும் சவால் உள்ளது.

அரச சேவை மேலும் செயல் திறனாக மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இராசி பலன்

21.06.2017
(ஆனி 07, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.30 மணிவரை
பரணி முற்பகல் 10.52 மணிவரை
சுபநேரம் 4.24 - 5.54 மணிவரை
இராகுகாலம் 11.54 - 1.24 மணிவரை
கார்த்திகை விரதம், பிரதோச விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் சந் | | செவ், புத சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி மாலை 4.28ற்கு இடப - சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்பட இடமுண்டு, உறவினர்கள் மத்தியில் தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எதிர் பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும் நாள்.

**கும்பம்** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக் றை காட்டுவர், எதற்காகவும் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான சம்பவங்கள் இடம் பெறும்.

**மகரம்** சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருள் சேர்க்கையுண்டு, பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்களின் மனங்கோணாது நடந்துகொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய இந்து அறநெறிக் கல்வி விழிப்புணர்வுக் கொடிவாரம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டது. திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலக உத்தியோகத்தர் ம.செந்தூரன்,கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு சென்று கொடிதினத்தை ஆரம்பித்து வைத்தார். கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், அலுவலக உத்தியோகத்தர்களாகிய சி.மேகிலா, ம.சுபராகினி ஆகியோர் கொடிகளைப் பெற்றுக்கொண்டு ஆதரவு வழங்கினர். (படங்கள்:- விஜயவாசன்)

# கொள்ளை, நிதி மோசடி சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் தலைமறைவாகியிருந்த நான்கு சந்தேக நபர்கள் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொள்ளை மற்றும் நிதி மோசடியில் ஈடுபட்டு வந்தவர்கள் எனும் குற்றச்சாட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தலைமறைவாகியிருந்த நான்கு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ஆனந்தராசா தெரிவித்தார். (5-104)

# கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய முத்தமிழ் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் முத்தமிழ் கலா மன்றத் தலைவர் கு.நிதுர்சன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.தமிழ்ச்சங்க உப தலைவரும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடா திபதியுமான தி.வேல்நம்பி, ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், வித்தியாலய முதல்வர் கு.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்வர். கடந்த 16 ஆம் திகதி குறித்த நிகழ்வு இடம்பெறவிருந்த நிலையில் ஹர்த்தால் காரணமாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3)

# பேருந்திலிருந்து தவறி விழுந்த இளைஞன் படுகாயம்!

பேருந்தில் மிதி பலகையில் நின்று பயணம் செய்த இளைஞன் ஒருவர் தவறி விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் சாவகச்சேரி சங்கரத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி வன்னேரிக் குளத்தினை சேர்ந்த ஆர். ராஜ்குமார் (வயது - 20) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (இ-11-89)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய வாகனம் பறிமுதல்;சாரதி கைது

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெரியவிளான் பகுதியிலிருந்து பண்டத்தரிப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை பொலிஸார் வழிமறித்துமேற்கொண்ட சோதனையின் போது சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் செல்வது தெரிய வந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் வாகனத்தை பறிமுதல் செய்ததோடு சாரதியையும் கைதுசெய்து நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (இ-5-8-104)

# தாபரிப்புப்பணம் செலுத்தாத தாயும் மகனும் கைது!

மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான தாபரிப்புப் பணத்தினை செலுத்தாத கணவருக்கும் அவரது தாயிற்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது. இளவாலை பனிப்புலம் பிரதேசத்தில் வசித்து வந்த மனைவி மற்றும் பிள்ளைகளுக்கான தாபரிப்புப் பணம் செலுத்தாத கணவனையும் அவருக்குப் பிணையாளியான தாயுக்கும் எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை கைது செய்து 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ்.ஆனந்தராசா தெரிவித்தார். (இ-5-104)

# சொற்பொழிவு

(வரணி)

யாழ்.வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் சொற்பொழிவில் இன்று முற்பகல் 11.30 மணிக்கு சிலப்பதிகாரம் காட்டும் அறவாழ்வு எனும் தலைப்பில் வரணி மத்திய கல்லூரி அதிபர் பரஞ்சோதி செல்வநாயகம் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்.(இ-5-103)

# பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு வகுப்புகள்

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு ஆண்டு பிரகடனத்தின் ஒரு பகுதியாக வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கு அரச வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் அரச பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளுக்கான இலவச வகுப்புக்கள் கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் வகுப்புக்கள் வாராந்தம் சனி.ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அனுபவம், ஆற்றல் மிக்க விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளது.

அரச முதியோர் இல்லத்தின் இந்த வேலை த்திட்ட த்திற்கு தன்னார்வ கொடையாளிகள் அனுசரணை வழங்க முன்வந்துள்ளனர்.

பொது உளச்சார்பு,பொது அறிவு, நுண்ணறிவு, மொழித் திறன் ஆகிய பாடங்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன.(இ-3)

# கலந்துரையாடல்

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில்லாலைப் பகுதியில் பொது மக்கள் பாதுகாப்பிற்கான கலந்துரையாடலொன்று கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் மற்றும் பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களான எஸ். கிருஷ்ணராஜா, எஸ்.விஜயபண்டார தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பொதுமக்களின் பாதுகாப்பு, டெங்கு நோய் ஒழிப்பு, வாகனப்போக்குவரத்து மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. (இ-5-104)




# தேசிய ஏற்றுமதியாளர் மன்றத்தினருடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஏற்றுமதியாளர் மன்றத்தினரால் வருடாந்தம் வழங்கி வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில் துறை மன்றத்தினரால் (Chamber of Commerce and Industries of yarl panam - City) மின்னஞ்சல் ஊடாக தமிழ் மற்றும் ஆங்கில விண்ணப்பங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் Jaffnacciy@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு விண்ணப்பிப்பதனூடாக விண்ணப்பங்களைப்பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர்:

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (இலங்கை உள்ளூர் ஏற்றுமதி முகவர்களூடாக ) தற்போது ஏற்றுமதியினை மேற்கொள்பவர்கள் அவ்விருதுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

வடபிராந்தியத்தில் வசிக்கும் ஏற்றுமதியாளர்களுக்கு விசேட பிராந்திய விருதுகள் வழங்கப்படும், வடபிராந்தியத்திலுள்ள ஏற்றுமதியாளர்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியும்.

மேற்படி விடயம் தொடர்பில் விண்ணப்பதாரி உரிய விளக்கங்களைபெற்றுக்கொள்வதற்கு வசதியாக யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தினரால் தேசிய ஏற்றுமதியாளர் மன்றத்தினருடன் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை இல.200, சிவன் பண்ணை வீதி, IIS CITY Campus, யாழ்ப்பாணம்.எனும் இடத்தில் இடம்பெறும். தொடர்புகளுக்கு : 021222 6609/ 070 366 3600 / 077 [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)

# மோ.சைக்கிள்-துவிச்சக்கர வண்டி மோதி விபத்து; இருவர் படுகாயம் மூவர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் 6.30 மணியளவில் மந்திகை மடத்தடி - தம்பசிட்டி வீதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குரும்பசிட்டி புலோலியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை அன்னலிங்கம் ( வயது -60) என்பவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த புலோலி தெற்கைச் சேர்ந்த செல்வ விநாயகம் செல்வகுமார் (வயது-23) என்பவரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் முறபகல் யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள மந்திகைச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)

# விபத்து குறித்து விழிப்புணர்வு

சாவகச்சேரி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதால் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸாரின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து வரும் குழுவினரால் போக்குவரத்து நடைமுறைகள் சட்டங்கள் தொடர்பாக செய்முறை விளக்கங்களும் கருத்தமர்வும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 தொடக்கம்10.30 வரை நடைபெறும். முதலில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கும் மாணவர்க ளுக்குமான செய்முறை விளக்கமும் தொடர்ந்து டச்சு வீதியிலமைந்துள்ள ஐங்கரன்மண்டபத்தில்மாணவர்களுக்கான கருத்தமர்வும் நடைபெறுமென சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார் (இ-29)

# அ.அட்டை இல்லாதவர்களுக்கு விசேட நடமாடும் சேவை நாளை

(குருநகர்)

யாழ்.பிரதேச செயலகப் பிரிவினால் குருநகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அடையாள அட்டை இல்லாதவர் களுக்கான விசேட நடமாடும் சேவை நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆவணங்களுடன் சமுகமளித்து அவ் விசேட சேவையில் பெற்றுக்கொள்ளுமாறு குருநகர் கிராம சேவையாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (இ-5-106)

# டெங்கு பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கோப்பாய்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட கிராமங்களில் அண்மைக்காலமாக பெருகி வரும் டெங்கு நுளம்புத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரும் யாழ். பொலிஸ் நிலைய பொலிஸாரும்இணைந்து கடந்த ஒரு வார காலமாக நகர்ப்புற கிராம வீடுகளில் நேரடியாக சென்று பார்வையிடுவதோடு டெங்கு நோய் தொர்டர்பான விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின் றனர். இதனடிப்படையில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் வீட்டு உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டின் மூலம் யாழ் மாநகர சபையை அண்மித்த பிரதேசங்களில்முற்றாக டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் தீவிர முயற்சியில் யாழ். மாநகர சபையின் சுகாதார பிரிவினர் இறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-108)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

66

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

அன்பு வாசகர்களே! தமிழர் தலைவிதி என்ற இத் தொடரில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. ஏலவே வெளிவந்த 63 ஆவது தொடரில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்திய மேதின நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரைக் கொண்டு தேசியக் கொடியை தூக்கிப் பிடிக்க வைத்தது தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அந்த நிகழ்வுக்குப் பின்னர் நடந்தது என்ன என்பது பற்றியே இத்தொடர் முன்னெடுக்க வேண்டும். ஆயினும் வட மாகாணத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர, அதனால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட பேரெழுச்சி என்பன குறித்து இத்தொடரில் பிரஸ்தாபித்துவிட்டு பின்னர் முன்னையதைத் தொடர்வது பொருத்தம் எனக் கருதுவதால் இன்றிலிருந்து இனிவரும் தொடர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது தமிழ் அரசுக் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், அதன் விளைவாக தமிழ்மக்கள் கொண்ட பேரெழுச்சி பற்றிய விடயங்களும் விமர்சனங்களும் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன்

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்திற்காக நடக்கின்ற முதலாவது தேர்தல் இது. இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவது மிகவும் முக்கியமானது என்பதில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு மிகவும் உறுதியாக இருந்தது.

2013 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பு ஓரளவுக்கு உறுதியாக இருந்தது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கட்சியை மிகவும் இறுக்கமாக வழி நடத்திக் கொண்டிருந்தார். அவரின் வழமையான கை உறுக்கல், அதட்டல் என்பன கட்சிக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தது. அதற்கு கொழும்பில் இருக்கக் கூடிய நேர்மையான தமிழ்ப் புத்திஜீவிகளின் ஆலோசனைகளும் கருத்துருவாக்கங்களும் காரணமாக இருந்தன. இச்சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தரமான ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இரா. சம்பந்தர் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அதற்காகத் தெரிவு செய்திருந்தார்.

முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனைத் தெரிவு செய்வதற்குப் பின்னால் அட்வகேட் கனகநாயகம், கனகேஸ்வரன் போன்றவர்களின் சிபார்சுகளும் இருந்தன. முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்துவது என்று இரா.சம்பந்தரும் கொழும்பில் இருக்கக்கூடிய நேர்மையான தமிழ் உணர்வாளர்களும் தீர்மானித்ததையடுத்து, சம்பந்தர் அவர்கள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் வீட்டிற்குச் சென்று இத்தகவலைத் தெரிவித்தார். பதவி வீடு தேடி வருகிறது என்பதற்காக நல்லது என்று விக்னேஸ்வரன் அவர்கள் கூறிவிடவில்லை.

மாறாக கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் நான் வருவதை விரும்புகின்றனவா? அவர்கள் அனைவரும் விரும்பி ஏற்றுக்கொண்டால் முதல்வர் வேட்பாளராக நிற்பதற்குத் தயார் எனவும் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய ஒரு சில கட்சிகள் எதிர்த்தாலும் தேர்தலில் போட்டியிடுவதை நான் விரும்பவில்லை எனவும் விக்னேஸ்வரன் அவர்கள் கூறினார். இந்நிலையில் கூட்டமைப்பின் கூட்டம் நடத்தப்படுகிறது.

தலைவர் இரா. சம்பந்தர் முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நியமிக்க இருப்பதான தகவலை வெளியிடுகிறார். இத்தகவல் ஒரு சிலருக்கும் ஒரு சில கட்சிகளுக்கும் அதிர்ச்சியை- குழப்பத்தைக் கொடுக்கிறது. இதில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலருக்கும் உடன்பாடிருக்கவில்லை.

இருந்தும் இரா.சம்பந்தரின் தலைமைத்துவத்திற்கு மாறாக- எதிராகச் செயற்பட்டால் அது தமது அரசியல் எதிர்காலத்திற்கு ஆபத்தாகிவிடும் என்ற அடிப்படையில் சம்பந்தரின் கருத்தை வெளிப்படையாக நிராகரிப்பதில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் பின்னடிப்புச் செய்தனர்.

அதேநேரம் கூட்டமைப்பின் ஒன்று இரண்டு பங்காளிக்கட்சிகளும் விக்னேஸ்வரனுக்குப் பதிலீடாக வேறு சிலரின் பெயர்களை முன் மொழிந்தனர். ஆனால் அவர்கள் பொருத்தமற்றவர்களாக இருந்ததுடன் இரா.சம்பந்தர் தான் எடுத்த முடிவை நிலைநிறுத்துவதில், நியாயப்படுத்துவதில் வல்லவர் என்பதால் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் தெரிவை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

கூட்டமைப்பில் இடம் பெறக்கூடிய அனைத்து பங்காளிக்கட்சிகளும் தமது சம்மதத்தை தெரிவிக்க இத்தகவல் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது. அவரும் மனப்பூர்வமாக கூட்டமைப்பின் அழைப்பை ஏற்றுக் கொண்டார்.



## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சருக்கு ஆதரவாக கையெழுத்துப் போராட்டம்

## திரட்டி ஆளுநருக்கு அனுப்பி வைக்க முடிவு



(மல்லாவி)

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக கிளிநொச்சி மாவட்ட ஜனநாயக இளைஞர் அமைப்பினால் கையெழுத்து திரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குறித்த கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி பொது சந்தையில் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் இளைஞர்கள் பலர் இணைந்து கையெழுத்து போராட்டத்தினை ஆரம்பித்தனர் பெருமளவானோர் குறித்த கையெழுத்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தெரிவித்தனர். குறித்த கையெழுத்து திரட்டும் போராட்டத்தில் பெருமளவானோர் தாமாகவே முன்வந்து ஒப்பமிட்டனர். இதே வேளை கையெழுத்துப் போராட்டம் கிளிநொச்சியில் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், கையொப்பம் தாங்கிய கடிதம் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-15)

## கடும் வரட்சியினால் குடிநீர் பற்றாக்குறை கிணறு ஊற்றெடுக்கும் வரை காத்திருக்கிறோம்



(மல்லாவி)

நாட்டில் நிலவிவரும் கடும் வரட்சி நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இதற்கமைய கிளிநொச்சி கோணாவில் கிழக்கு பிரதேச மக்கள் குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நாளாந்த தேவைகளிற்கு குடிநீரை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோணாவில் கிழக்கு பிரதேச மக்கள் இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர். நீண்ட காலமாக இவ்வாறானதொரு பிரச்சினைக்கு தாம் முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கும் மக்கள், இருக்கும் ஒரேயொரு கிணற்றில் 350 குடும்பங்களிற்கு மேல் பயன்படுத்தி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிணற்று நீரை முந்தியடித்து பெற்றுக் கொள்வதற்காக அதிகாலையிலேயே கிணற்றுக்கு செல்ல வேண்டி உள்ளதாக தெரிவிக்கும் மக்கள், சில சமயங்களில் நீர் முடிவடைந்ததும் அயல் கிராமத்திற்கு செல்ல வேண்டி ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். குறித்த கிணறு மீண்டும் உற்றெடுத்ததன் பின்னரே நீரை பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் பிரதேசசபையினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லை என கவலையுறும் கோணாவில் கிழக்கு மக்கள், தமக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

## இ.போ.ச - தனியார் பேருந்துகள் மோதுண்டு விபத்துக்குள்ளாகின





(குருமன்காடு)

வவுனியாவில் இ.போ.ச பேருந்து மற்றும் தனியார் பேருந்து விபத்துக்குள்ளாகின.

வவுனியா ஏ9 வீதி சுகாதார திணைக்களத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல்1.30மணியளவில் தனியார் பேருந்தும் இ.போ.ச பேருந்தும மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இவ் விபத்துச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவிலிருந்து பணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சுகாதாரத் திணைக்களத்திற்கு முன்பாக அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில் கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

## கனகராஜன்குள ஆச்சிரம வளாகத்தில் 3 ஆவது சர்தேச யோகா தினம்

(கிளிநொச்சி)

3 ஆவது சர்வதேச யோகா தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யம் கனகராயன்குள ஆச்சிரம வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் சின்மயா மிஷன் யாழ்ப்பாணக் கிளையின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்ஙாரிஜாக்ரத்சைதன்யா அருளாசி வழங்கி சிறப்புரையாற்றவுள்ளார்.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத்துணை உயர்ஸ்தானிகர் ஆ. நடராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

18ஆசனங்கள் எமது யோகா மாணவர்களினால் செய்து காண்பிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு 077 3650 280, 077 458 0189,071 833 2563, 077 431 8713 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவலகளைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




## மஹாகும்பாபிஷேக தின சங்காபிஷேகப் பெருவிழா

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி இயக்கச்சியில் அமைந்துள்ள திருவருள் மிகு மல்வில் கிருஷ்ணன் திருக்கோவிலில் மஹாகும்பாபிஷேக தின சங்காபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து சமய சொற்பொழிவுகள், கலைநிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகி விசேட வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று எம்பெருமான் வீதியுலா எழுந்தருளி அருள்பாலிப்பார். அனைத்து அடியார்களும் கலந்து கொண்டுபெருமானின் அருளைப் பெறுமாறு ஆலய நிர்வாக சபையினர் கேட்டுள்ளனர். (2-29)

## உலக தமிழ் மொழிகள் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கட்டுரை,ஓவியப் போட்டிகள்

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் பிரகடனம் செய்துள்ள உலகத் தமிழ் மொழிகள் தினத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு கட்டுரை.ஓவியப் போட்டிகளை வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம், கிளிநொச்சி பக்கவாத பராமரிப்பு இல்லம் எனும் அரச சார்பற்ற நிறுவனம் என்பன இணைந்து மேற்படி போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளது.

அமெரிக்க இலங்கை தமிழ்சங்கம் உலகளாவிய ரீதியில் நடத்தும் இப் போட்டிகளை இலங்கையிலும் மற்றும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் நடத்தப்பட உள்ளதாகவும் தமிழ் கட்டுரை என்பட்டறிவு என்னும் தொனிப் பொருளைக் கொண்டதாகவும் ஓவியப்போட்டி உறவுச் சித்திரங்கள் தமிழ் உறவுகளின் உணர்வுகளைச் சித்தரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

இப் போட்டிகள் கீழ் பிரிவு, மேற் பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற உள்ளது.

இதற்கமைய கீழ் பிரிவில் 12 வயது முதல் 15 வயது வரையிலானோரும் மேல் பிரிவில், 16 வயது முதல் 18 வயது வரையிலானோர் உள்ளடங்குவார்கள்.

கீழ் பிரிவிற்கான கட்டுரை தலைப்புகளாக "நான் வாழும் சூழலும் எனது கல்வியும், இடம் பெயர்ந்து வாழ்தல் அல்லது புலம் பெயர்ந்து வாழ்தல், எனது குடும்பம், எனது எதிர்கால கனவுகள்" என்பவை அறிவிக்கப்பட்டுள்ளன.

கீழ்பிரிவு கட்டுரை 150 சொற்களுக்கு குறையாமலும் 250 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்படல் வேண்டும்.

மேற்பிரிவுக்கு கட்டுரை தலைப்புகளாக போரும் வாழ்வும், கல்விச் சூழல் அன்றும் இன்றும் அல்லது நானும் என் நாடும்,போர் காலத்தில் மாணவர் கல்வி , என் எதிர்காலம் எதை நோக்கி..... என்பவை அறிவிக்கப்பட்டுள்ளன.

இப் பிரிவு கட்டுரைகள் 400 சொற்களுக்கு குறையாமலும் 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதப்பட வேண்டும்.

ஓவியப் போட்டிகளும் கீழ் பிரிவு ,மேல் பிரிவு என நடத்தப்பட உள்ளது.

ஓவியத்துக்கு ஏ4 ,அல்லது ஏ3 தாளைப் பயன்படுத்த முடியும்.

பொதுவாகப் புழக்கத்தில் உள்ளதும் இலகுவில் பயன்படுத்தக் கூடியதுமான வர்ண வகைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

கலர் பென்சில்,வோட்டர் கலர்,ஒயில் பெயின்ற் , அக்றிலிக் பெயின்ற் ஆகியவை பயன்படுத்தலாம்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது முழுப் பெயர், பிறந்த திகதி,கல்வி கற்கும் பாடசாலை, தரம், தொடர்பு முகவரி, ஆகியவற்றைத் தாளின் முன்பக்கத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

அத்துடன் மாணவர்கள் தமது ஆக்கங்களை தாம் கல்வி பயிலும் பாடசாலை அதிபரின் அத்தாட்சிக் கையொப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

மாணவர் தாம் பங்கு பற்றும் ஒரு போட்டிக்கு ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்ப முடியும்.

கட்டுரை எழுதுபவர்கள் ஏ4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதுதல் வேண்டும்.

போட்டி முடிவுகள் 20.09.2017 ஆம் திகதி பொது அறிவித்தல் மூலமாகவும், வெற்றி பெற்றவர்களுக்கு தனித்தனியாகவும் அறிவிக்கப்படும்.

போட்டிக்கு பெறப்பட்ட ஆக்கங்களை பிரசுரம் செய்தல், காட்சிப்படுத்தல் மற்றும் வெளியீட்டு உரிமை என்பன போட்டி ஒருங்கமைப்பாளர்களுக்குரியது.

கட்டுரை ,ஓவியப் போட்டிகளுக்கு முதலாம், 2ஆம்,3 ஆம் பரிசுகளும், 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

முதலாம் பரிசாக 500 அமெரிக்க டொலர்களும், இரண்டாம் பரிசாக 400 அமெரிக்க டொலர்களும் , மூன்றாம் பரிசாக 300 அமெரிக்க டொலர்களும், ஆறுதல் பரிசாக தலா 10 பேருக்கு 100 அமெரிக்க டொலர்கள் வீதம் வழங்கப்பட உள்ளது.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்திற்கு அருகாமையில் இருக்கும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் நேரில் அல்லது அலுவலக நேரத்தில் 021 228 3363 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும்.அல்லது பரலைஸ் மெடிசின் ஹோம், இல 452 , ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி எனும் முகவரியுடன் அல்லது 077 369 2128 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்

போட்டிக்குரிய ஆக்கங்களை பரலைஸ் மெடிசின் ஹோம், இல 452 ,ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு வன்பிரதிகளாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி help@paralyeshome.com க்கு மென்பிரதிகளாகவோ அனுப்ப முடியும். ஓவியங்கள் கட்டாயமாக வன்பிரதிகளாக மட்டுமே அனுப்ப முடியும்.

நாட்டில் உள்ள ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மாணவர்கள் மேற்காட்டிய முகவரியிலுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு போதுமான தகவல்களைப் பெற முடியும். அல்லது dssokili1416@gmail.com ,help@paralyeshome.com ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுடன் தொடர்பு கொண்டு போட்டிகள் தொடர்பான ஆவணங்களின் மென் பிரதிகளைப் பெற முடியும்.

இப்போட்டிகள் தொடர்பான விபரம் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான முடிவுத் திகதி 20.07.2017 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதகுருமார்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் எமக்கு அவசியம்

## காணாமல் போனோரின் உறவுகள் கோரிக்கை



வடக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிவதற்கு மதகுருக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை அடிகளாருக்கும் வடக்கில் காணாமல் போனவர்களின் உறவுகளின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த பிரதிநிதிகளுக்கு இடையே கலந்துரையாடல் ஒன்று மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் உறவுகள் கருத்து தெரிவிக்கையில்.

வடக்கில் வலிந்து காணாமல் போன எமது உறவுகளை நாமாகவே தேடுவதற்கும் அவர்களை கண்டறிவதற்கு அரசை வலியுறுத்தவும் எமக்கு பக்கபலமாக பலர் இருந்து வந்துள்ளனர்.

அந்த வகையில் கூடிய அளவு எம்மில் அக்கறையுடன் எமக்கான ஆலோசனைகளை மதகுருக்கள் வழங்கி வருகின்றனர். அது எமக்கு பலத்தை ஏற்படுத்தியுள்ளது. எமது தொடர் போராட்டங்களுக்கும் எமது பிள்ளைகளை மீட்பதற்கும் தொடர்ச்சியாக அவர்களின் ஒத்துழைப்பு அவசியம். அதனடிப்படையிலேயே நாம் மன்னார் ஆயரை சந்தித்து கலந்துரையாடி இருந்தோம்.

எமது பிள்ளைகளை தேடி நாம் அலையும் நாட்களில் எமக்கு பக்கபலமாக எப்போதும் இருப்பவர்கள் மதகுருக்கள்தான். எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் அவசியம்.

அண்மையில் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட சந்திப்பில் அவர் அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை அதற்காக காத்துக் கொண்டு இருக்கிறோம். சர்வதேச ரீதியில் எமது பிரச்சினையை தெரியப்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு எமக்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-9)

# நெல் உலர விடுவதற்கு தளங்கள் நான்கு துணுக்காய், உடையார்கட்டில் அமைக்கப்படும்

## முல்லை. மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடான 20 இலட்சம் ரூபா செலவில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத்திணைக்களத்தின்கீழுள்ள துணுக்காய், உடையார் கட்டு ஆகிய இடங்களில் விவசாயிகளின் நலன் கருதி நெல் உலரவிடும் தளம் அமைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொன்னையா - அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் நடப்பாண்டுக்குரிய குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடான 20 இலட்சம் ரூபா செலவில் துணுக்காய் பகுதியில் இரண்டு நெல் உலரவிடும் தளமும், உடையார் கட்டு பகுதியில் இரண்டு நெல் உலரவிடும் தளமுமாக மொத்தம் நான்கு தளங்கள் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கேள்வி கோரல்கள் மூலமாக பொருத்தமான ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படவுள்ளது.

எனவே வேலைகள் நடைபெறும் பகுதியில் உள்ள கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகள் நடைபெறவுள்ள வேலைகள் தொடர்பில் கண்காணிப்புச் செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ எனக்கு கிடைக்க கூடியவாறு எழுத்து மூலம் தகவல்களை அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# இரணைதீவு மக்களை மீளக்குடியேற்ற அனுமதிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைதீவு மக்களை அவர்களது பூர்வீக வாழ்விடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால.சிறிசேனவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இரணைதீவு மக்கள் தம்மைத் தமது பூர்வீக வாழ்விடத்தில் குடியேறி வாழ அனுமதிக்குமாறு கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிலையில் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு மக்கள், பங்குத் தந்தை ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் விசேட கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் வருமாறு,

"கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இரணைதீவு கிராம அலுவலர் பிரிவு 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக் கடற்படையினால் கையகப்படுத்தியிருப்பதும் அதன் விளைவாக தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட 437 குடும்பங்களின் மீள்குடியேற்றம் இன்றுவரை நிகழாது இருப்பது தொடர்பில் தங்களின் விசேட கவனத்தை ஈர்க்க இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

இரணைதீவு மக்கள் கடந்த ஏழு வருடங்களாக தமது சொந்த இடத்தில் தம்மை மீளக்குடியேற்றுமாறு கோரி வந்ததுடன் அதற்கான கவனயீர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விடயம் தொடர்பில் நான் ஏற்கனவே தங்களின் உயர்வான கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதுடன் பாராளுமன்றத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறேன். குறித்த கிராம மக்களை மீளக்குடியமர்த்துமாறு கத்தோலிக்க மதகுருமார்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

இரணைதீவு மக்கள் மீளக் குடியமர்த்த வேண்டும் எனவும்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

2017.02.08ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன ஆகியோருடன் பாராளுமன்றத்தில் கேள்வி நேர உரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தது. 2017. 05.05 ஆம் திகதி என்னால் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தாங்கள் சம்பூரில் 2017.05.23ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் "காணிகளையும் வீடுகளையும்பெற்றுக்கொண்ட மக்களே மீண்டும் ஒரு காணிக்காகப் போராடுகின்றார்கள்" என உரை நிகழ்த்தியதாக வெளிவந்த செய்திகள் எம்மை அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது.

1899 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி வெளியிடப்பட்டஅரச வர்த்தமானி அறிவித்தலின்படி 1934 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி குறித்த தீவு கத்தோலிக்க திருச்சபைக்கும் அதன் பங்கு மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலம் அம்மக்களின் பூர்விக வாழ்வுரிமை நிலம் இரணைதீவு என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்களோ அங்கு மீள்குடியேற்றப்பட வேண்டும் என்பதும் அவ்வாறு குடியேற்ற மறுக்கின்றமை ஐ.நாவின் சர்வதேச கோட்பாடுகளுக்கு எதிரானது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனாதிபதி அவர்களே! இரணைதீவு மக்கள் தங்கள் பூர்வீக இடங்களில் வாழ்வதற்காக கடந்த பன்னிரெண்டு வாரங்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஜெனீவாவில் தாங்கள் அரசு மீள்குடியேற்றம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக எமது மக்கள் போராட வேண்டியிருப்பது துரதிஷ்டவசமானது.

ஆகவே இவ்விடயம்தொடர்பாக விரிவாக ஆராய்ந்து யாழ்ப்பாண ஆயர், இரணைதீவு பங்குத்தந்தையுடனும், அரசஅதிகாரிகளுடனும் குறித்த மக்களுடனும் நேரடிக் கலந்துரையாடல்களை நிகழ்த்தி இரணைதீவு மக்களின் மீள்குடியேற்றத்தை விரைவு படுத்துமாறும் அவர்களின் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டத்துக்குத் தங்களின் நல்லாட்சியில் நீதி வழங்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-281-312)

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கைகளுக்கான தெரிவும் சிறந்த விவசாயிகள் தெரிவும்- 2017

வடக்கு மாகாண சபையின் விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல்.நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழும் விவசாயத் திணைக்களத்தின் மீண்டு வரும் செலவீன நிதி ஒதுக்கீட்டின் கீழும் சிறந்த விவசாயிகள் தெரிவு மற்றும் சிறந்த வீட்டுத்தோட்டச்செய்கையாளர்களுக்கான தெரிவு - 2017 நடைபெறவுள்ளதாக மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் (வவுனியா) தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம்.பெண் வலுவூட்டலை நிலைப்படுத்தலுக்காக சிறந்த விவசாய பெறுமதி சேர் நடவடிக்கையுடன் வணிக முறைமையையும் பின்பற்றும் விவசாயப் பெண்கள்.பெண்கள் சங்கங்கள், நவீன விவசாய இயந்திரமயமாக்கலை மேற்கொள்ளும் சிறந்தவிவசாயிகள், இளம் விவசாயிகள் சங்கங்கள், சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்களுக்கான தெரிவு, சிறந்த சேதன விவசாய செய்கையாளர்களுக்கான தெரிவு ஆகிய தலைப்புகளின்கீழ் விவசாயிகளை தெரிவு செய்து கௌரவிக்கும் திட்டத்தின் கீழ்முதலில்விவசாய போதனாசிரியர் மட்டத்தில் நடத்தப்பட்டுமுதல் மூன்றுவெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும், வெற்றிக்கேடயமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் போட்டியாளர்கள் உங்கள் பகுதியிலுள்ள விவசாய போதனாசிரியர் காரியாலயத்திலும், மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும், மாவட்டபிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்திலும் போட்டிக்கான விதிமுறைகளை அறிந்து கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியரிடம் கையளிக்கவேண்டும்.

மாவட்ட மட்ட வெற்றியாளர்களுக்கு உழவர் பெருவிழாவில் பணப்பரிசில்கள், வெற்றிக்கேடயம் சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# புளியங்குளத்தில் திருவள்ளுவர் சிலை திறப்பு



வவுனியா புளியங்குளத்தில் திருவள்ளுவர் சிலை இந்திய துணைத்தூதர் ஆ.நடராஜனினால் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு திறந்த வைக்கப்பட்டது.

வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரியின் நுழைவாயிலுக்கு அருகாமையில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலை அதிபர் ச.பரமேஸ்வரநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

விசேட விருந்தினராக திருவள்ளுவர் சிலையை நன்கொடையாக வழங்கிய தமிழ் நாட்டின் தொழிலதிபர் டாக்டர். வி.ஜி.சந்தோசம் கலந்து கொண்டிருந்தார்.

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவர்களின் வரவேற்பு, திருக்குறள் நடனம், மாணவர்களின் திருக்குறள் - பாவோதல், பேச்சு போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றது.

மகிழ்வுரையை கலாநிதி தமிழ் மணி அகளங்கன் மற்றும் கவிஞர் ரவிபாரதி ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு இந்தியத்துணைத்தூதர் ஆ.நடராஜன் மற்றும் தமிழ் நாட்டின் தொழிலதிபர் ஆகியோர் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

அத்துடன் விருந்தினர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வவுனியா வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர் வ.சிறிஸ்கந்தராஜா, வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (2-15-312-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாக்கலையின் மகிமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் சர்வதேச யோகா தினம்



இன்று சர்வதேச யோகா தினம். இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

இந்து தத்துவமரபின் வழி முகிழ்த்த அரும்பெரும் தத்துவவியலாக நோக்கப்படும் யோகக் கலையின் தாற்பரியத்தை தற்கால அறிவியல்யுகம்நன்கு உணர்ந்திருக்கிறது. தற்காலத்தில் இக் கலையைப் பற்றியதான புரிதல்கள்- அக்கறைகள் சர்வதேச அரங்கில் மேலெழுகை பெற்றிருக்கின்றமையால் தான் ஐ.நா உயர்சபை வரை எதிரொலித்துள்ளது. இது இந்து மதம் சார் கலையொன்றிற்குக் கிடைத்த அதியுயர் கௌரவமாக அமைகின்றது. நவீன மருத்துவவியலே வியக்குமளவிற்கு பாரம்பரிய மருத்துவ விஞ்ஞானமாகிய இக்கலை, சகல விதமான உடல், உள ரீதியான நோய்களைக் குணமாக்கும் திறனை அதிகமாகப் பெற்றிருக்கிறமையே சர்வதேசத்தை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது.

இத்துணை சிறப்புக்களையுடைய யோகம் எனும் விடயப்பரப்பு விசாலமானது. இதற்குள் இருக்கக் கூடியதான மெய்ஞ்ஞான அறிவியல் விடயங்கள்,நவீன விஞ்ஞான ரீதியான கொள்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகின்றதெனில் அதில் தவறிருக்க முடியாது.

யோகம் எனும் சொல் ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்குணர்த்தி நிற்கிறது."யுஜ்" எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்து நிற்கும் பொருளை நோக்கின், இணைத்தல் அல்லது ஒன்று சேர்த்தல் என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற் கலையாக விளங்குகிறது.

இதனை இன்னொருவிதமாகக் கூறும்போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்க நெறிகளை - வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இறைவனால் மனிதனின் ஆன்ம ஈடேற்றம் கருதி அளிக்கப்பெற்ற அரும்பெரும் பொக்கிசமான இக்கலையைச் சூத்திர வடிவில் தொகுத்தளித்த பெருமை யோகி பதஞ்சலி மாமுனிவரையே சாரும். இவரே பின்னாளில் யோகத்தின் தந்தையாக போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார். இவரால் யாக்கப் பெற்ற யோக சூத்திரங்களே மூல நூலாக கொள்ளப்படுகிறது.

இற்றைக்கு சுமார் 5000 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக நம்பப்படும் இக்கலையின் தோற்றம் பற்றிக் கருத்துரைப்பதானது விவாதத்திற்குட்பட்ட வகையாலும் உறுதியான எழுத்தாவணங்கள் இன்மையாலும் இது பற்றிய ஆய்வை மேற்கொள்வது கடினமானது. காரணம், சனாதன தர்மம் எனப் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்ற இந்து மதத்தின் தோற்றக்காலத்தைக் சரியாக கணிப்பதும் வரையறைக் குட்படுத்துவதும் முடியாத காரியம்.

எனவே ஆதியாய் அநாதியாய் விளங்கும் இந்துமதமானது திடமான கால தேச வர்த்தமான வரையறைகளுக்கப்பாற்பட்டதாகவே விளங்குகிறது. ஊகத்தினடிப்படையில் அமைந்த தொல்லியலாராய்ச்சிச் சான்றாதாரங்கள் வெளிப்படுத்திநிற்கும் முடிவுகளின்படி சிந்துவெளி நாகரிகத்துடனே இந்துமதத்தின் வழிபாட்டியல் சார்ந்த தோற்றமும் ஆரம்பமாவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இதிலிருந்து நேரிடையாக நோக்கின் மிகப் புராதனமான இந்துமதத்தின் வேரிலிருந்து முகிழ்த்தெழுந்த யோகக் கலையும் சிந்துவெளியுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும்என்ற வாதமும் வலுக்கொள்வது தவிர்க்க முடியாது. அந்தவகையில் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் தியான நிலையிலுள்ள யோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை இக்கலை மிகவும் பழைமையானது என்ற முடிவுக்கு வலுச்சேர்க்கிறது.

தொடர்ந்து வந்த வேதகாலம் மற்றும் புராண, இதிகாச காலங்களில் இக்கலை பற்றியதான குறிப்புக்களைப் பரவலாக காணலாம். வேதாந்த, சித்தாந்த தத்துவங்கள், சாங்கிய, வைசேடிக தத்துவங்கள் மற்றும் பிரம்ம சூத்திரம் போன்ற பல தத்துவங்களிலும் யோகத்திற்கு காத்திரமான முக்கியத்துவமளிக்கப்பட்டிருக்கிறது. பகவத்கீதையில் 6 ஆம் அத்தியாயத்தில் யோகத்தைப் பற்றிய ஏராளமான அம்சங்கள் உள்ளடங்கியிருக்கின்றமை குறிப்பிடற்பாலது.

யோகமார்க்கத்தை பயிற்சி முறையினை அடிப்படையாகக் கொண்டு இருவகையாக பிரித்து நோக்கலாம். முதல்வகை உடல் சார்ந்தது. மற்றையது மனம் சார்ந்தது. இங்கு உடலை அடிப்படையாகக் கொண்ட யோகப்பயிற்சிகளை மேலும் இருவகையினதாகப் பகுக்கலாம். 1.ஹட யோகம். 2.லய யோகம்(குண்டலினி யோகம்) அதாவது தற்காலத்தில் அதிக கவனிப்புக்குரியதாக விளங்கும் ஹடயோகம் பற்றியதான விடயமானது 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யோகியான ஸ்வாத்மராமாவின் "ஹடயோகப்பிரதீபிகா" எனும் நூலில் விளக்கப்பட்டுள்ளது.

அதாவது ஆசனப்பயிற்சிகளனைத்தும் இதற்குள்ளடங்குகிறது. மனம்சார் யோகப்பயிற்சி முறைகள் மூவகைப்பட்டன. அவை 1.கர்ம யோகம் 2.பக்தி யோகம் 3.ஞான யோகம் என்பவையாகும். இங்கு உடலையும் மனதினையும் மையப்படுத்திய யோகத்தை இராஜ யோக முறைக்குள்ளடக்கப்படுகிறது.

யோகக்கலையின் தந்தையாக விளங்குகின்ற பதஞ்சலி மாமுனிவரின் 196 யோக சூத்திரங்களும் இராஜயோகமுறைக்குள்ளேயே வருகின்றது. பொதுவாக நோக்குமிடத்து சித்தர்கள், யோகிகள் கடைப்பிடித்த யோக முறையானது பதஞ்சலி மாமுனிவரால் யாக்கப்பெற்ற இராஜயோகமுறையை அடியொற்றியதாகும்.

இஃது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கருவியாக தொழிற்படுகின்றது. அதாவது ஆன்மா விடுதலையடைந்து ஆனந்த நிலையை எய்த வேண்டும் என்பதே இதன் பிரதான குறிக்கோளாகும். இது மனிதனது உடல், உள, ஆன்மீக நலன்களை மேம்படுத்துவதில் தொடங்கி இறுதி இலட்சியமான மோட்ச நிலையையடைதலீறான வாழ்வியற் கோட்பாடுகளை படிமுறையாக விளக்குகின்றது.

இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டு வகையான வாழ்வியற் படிமுறைகள் காணப்படுகிறன. இது பற்றிய விளக்கத்தைச் மிகச் சுருக்கமாக நோக்கும்போது,

1. இயமம்- தீயவற்றை விட்டொழித்தல் (கொல்லாமை, பொய் கூறாமை, களவுசெய்யாமை, காமமின்மை)

2. நியமம்- நன்றாற்றல் (பிறருக்கு உதவுதல், பரோபகாரம், துய்மையுடைமை, வாய்மை, தவம் புரிதல்)

3. ஆசனம்- இருக்கை நிலை (உடல் நன்னிலையடைதலுக்கான உடல்சார்ந்த பயிற்சிமுறைகளை செய்தல்)

4. பிராணாயாமம்- சுவாசத்தை சீராக்கம் செய்தல் (பிராணனை தன்வயப்படுத்தி அடக்கியாளும் கலை)

5. பிரத்தியாகாரம்- ஐம்புலன்களையும் புறவுலகப்பொருட்களிலிருந்து விடுவித்து அகமுகமாகத் திருப்புதல்.

6. தாரணை- மனதை ஒரு நிலைப்படுத்தல்.

7. தியானம்- மனதை கட்டுப்படுத்தி எடுத்துக்கொண்ட பொருள் மீதான உண்மைத்தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல்,தெளிதல் நிலை திரியா மனதினைப் பெறல்

8. சமாதி- உணர்வொடுங்கிய நிலை அதாவது இறைவனுக்குச் சமமான (மோட்ச)நிலை.

அண்டத்திலிருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கிறது எனும் கருத்துருவே சித்தர்கள் வகுத்த யோக நெறியின் மையக்கருத்தியலாக அமைகிறது. அதாவது அண்டம் என்றால் உலகம் எனவும் பிண்டம் என்பது நமது உடல் எனவும் கொண்டு, அண்டமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கைகளாலானது. இதுபோலவே உடலிலும் ஐம்பூதங்களின் ஆதிக்கமானது நிலை பெற்றிருக்கிறது.

இங்கு நிலம்- பருஉடல், நீர்- இரத்தம் மற்றும் சீழ் போன்ற திரவம், தீ- உடல் வெப்பநிலை, காற்று- பிராணன் முதலிய தச வாயுக்கள், ஆகாயம் - மனம் போன்றவற்றைக் குறிப்பதாக அறியப்படுகிறது.

இந்தப் பருவுடலானது மண்ணிலிருந்து தோன்றி உயிரடங்கப் பெறுகையில் ஈற்றில் மீண்டும் மண்ணுக்கே திரும்புகிறது. அதனால்தான் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் இருக்கிறது என யோகிகள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் மனித வாழ்வியல் இயற்கையுடன் பின்னப்பட்டிருக்கிறது என்ற விடயம் இழையோடியுள்ளது. இருப்பினும் தற்கால நவீனத்துவமானசூழலில் இயற்கையினின்றும் வழுவியதான- இயற்கையை விரோதிக்கும் வாழ்க்கை முறையை வாழத்தலைப்பட்டதனாலேயே நமது வாழ்க்கையில் இத்துணை இடர்பாடுகளையும் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது.

இங்கு யோகமானது இயற்கையை ஆராதிக்கின்றது என்பதற்குச் சான்றாக 'சூரியநமஸ்காரம்' என்ற இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற பயிற்சி முறையைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இறுதியாக, தமக்கேயுரித்தான நீண்ட- நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தையும் தனித்துவமான வாழ்வியல் அடையாளங்களையும் பேணி உலகிற்கே எடுத்துக்காட்டாக விளங்கிய நம் சமூகத்தின் தற்போதைய நிலையானது பரிதாபத்திற்குரியதாகவே விளங்குகிறது.

இந்நிலையில், நமது பண்பாட்டு வேர்களையும் அடையாள இருப்புகளையும் உறுதிசெய்து,அடுத்த சந்ததிக்கும் அளிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எம்முன் விரிந்திருக்கிறது. அதனொரு கட்டமாக, இந்துப்பண்பாட்டியலின் வழித்தோன்றலான யோகக் கலையின் தனித்துவத்தையும் இருப்பையும் பேண்தகு நிலையில் நிலைபெறச் செய்யவேண்டியது கட்டாயமாகிறது.

இன்று நவீன மருத்துவவியலுக்கே சவால் விட்டுவருகின்ற குணப்படுத்த முடியாத பலவிதமான உடல், உள ரீதியான நோய்களைக் குணமாக்கும் திறன் யோகப்பயிற்சிகளுக்குண்டென்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையால் இக்கலையின் மீதான நாட்டம், ஆர்வம், தேடல்கள் சர்வதேசமெங்கும் பெருகிவரும் நிலையில், நாமோ மேலைத்தேய மக்களது கலாசாரக் குப்பைகளை இறக்குமதி செய்தும் அவர்களின் வாழ்வியல் நடைமுறைகளை பின்பற்றியும் பக்கவிளைவுகள் அதிகம் நிறைந்த மருந்துவகைகளை பயன்படுத்தியும் வருவதால் பல்வேறு விதமான உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறோம்.

இன்று நம் சமூகம் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கான வழிவகைகளை எமக்குள்ளேயிருந்து நாமே கண்டுபிடித்து நிவர்த்திக்க வேண்டுமே தவிர பிறர்மீது குற்றங்காணவிழைவது அபத்தமாகும். இதன்மூலமே எம் மீது வரும் பழிச்சொற்களைக் களைந்து சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம்.

இவ்விதமான சுயமதிப்பீடுகளுக்கும் சுய விமர்சனங்களுக்குமான சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்த வல்ல ஆற்றல் ஆன்மீக மறுமலர்ச்சிக்குண்டென்றவகையால் அதற்கான உந்துசக்தியாக யோகக்கலையினை மையமாக வைத்தே ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதற்கான முன் முயற்சியாக கல்விக்கூடங்களில் இதனை மாணவர்களுக்குப் போதிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்ள வேண்டும்.

காரணம், இளையோரிடத்தே அதிகரித்து வருகின்ற மது, போதைப்பொருட்கள், புகைத்தல் பாவனைகள் இதன் தொடர்ச்சியால் மேற்கிளம்புகின்ற பாலியல் வன்முறைகள், கொலை, களவு, குழுச்சண்டைகள்,குடும்ப வன்முறைகள் முதலிய பல்வேறு சமூக விரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

எனவே நமது பாரம்பரிய தலைமரபான யோகக்கலையை இன, மத பேதம் கடந்து பேணுவதனூடாக ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கருத்துருவாக்கச் சிந்தனையை அனைவரிடத்திலும் வலுப்படுத்திச் செயலாற்ற முன்வர வேண்டியது அவசியமாகும்.

நதிபரன்
(யோகா போதனாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் கொலை வழக்கு; மேன்முறையீட்டு மனு மீது செப்டெம்பரில் விசாரணை



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலை வழக்கு தொடர்பில் முன் வைக்கப்பட்ட மேன் முறையீட்டு மனு மீது செப்டெம்பர் 4 ஆம் திகதி விசாரணை இடம்பெ றவுள்ளது.

தனது கணவரின் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மூவரை விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, சசிகலா ரவிராஜினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், மேல் நீதிமன்றத்தின் ஜூரி சபை முன் னிலையில். வழக்கு விசாரிக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது எனமனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய, விடயங் களை ஆராய்ந்த நீதிமன்றம் செப்டெம்பர் 4ஆம் திகதி இந்த வழக்கை விசாரணை க்கு எடுத்துக் கொள்ள தீர் மானித்துள்ளது.

இதேவேளை, சந்தேக நபர்களான கடற்படை அதி காரிகள் மூவருக்கும் நோட் டீஸ் அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-3)







## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT) பதவி வெற்றிடம்/ ஆட்சேர்ப்பு

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், இலங்கை சோசலிசக் குடியரசின் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும்.

இந்நிறுவனத்திற்கு பின்வரும் தகைமையுடைய வடமராட்சியில் நிரந்தரமாக வசிக்கும் 18-35 வயதிற்குட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிநிலை:- கள உத்தியோகத்தர்-01

தகைமைகள்:-

01. க.பொ.த. (உயர்தரம்) சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட
02. ஆங்கில அறிவு, கணனி அறிவு
03. மோட்டார்சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம்
04. ஏனைய தகைமைகள்

சேவையின் தன்மை- கிராம அமைப்புக்களுடனும் மக்களுடனும் சமூக அணிதிரட்டும் ஆற்றலை மேம்படுத்தும் திறன், பேச்சாற்றல், தொடர்பாடல், ஆவணப்படுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் எனும் திறன்களை கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரி தமது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT), அல்வாய் கிழக்கு, அல்வாய் என்ற முகவரிக்கு 28.06.2017 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

(சி-8838)

## மருத்துவர்களின் மரணம்; சிறுகதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் எழுதிய மருத்துவர்களின் மரணம் சிறுகதைத் தொகுதி வெளியீடு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/ இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)


## கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் நாள் நாளை

(யாழ்ப்பாணம்)

யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசில் நாள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் வித்தியாலய அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராக லண்டன்-பழைய மாணவர் சங்கத் தலைவர் சின்னத்துரை துரைசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# இலங். படைகளுக்கு பயிற்சியளிக்க இந்திய கடற்படை விமானம் வந்தது!





(கொழும்பு)

இலங்கை கடற்படை மற்றும் விமானப்படைக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இந்திய கடற்படையின் டோனியர் விமானம் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இந்தியா- இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டத்தின் ஒரு கட்டமாகவே, இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது.

இந்தியக் கடற்படையின் டோனியர் ரக ஆழ்கடல் கண்காணிப்பு விமானம், இலங்கை கடற்படையினருக்கும், விமானப்படையி னருக்கும் பயிற்சிகளை அளிக்கவுள்ளது.

இந்திய கடற்படை விமா னம் ஒன்று இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிப்பதற்காக, கட்டுநாயக்கவுக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும். (இ-3)

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2017 (கட்டம்-2)

பருத்தித்துறை பிரதேச சபை.புலோலி

01.தலைவர், பெறுகைக்குழு, பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி, வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காக கோருகின்றார்.

02.தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. எனினும் பொது நிதிச் சுற்றறிக்கை இல. 04/2016(1) இற்கமைவாக இவ்விலை மனு கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு.வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்.அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை(**Schedule**) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், பருத்தித்துறை பிரதேச. சபை. புலோலி. (தொலைபேசி. தொலைநகல் : 021-2263276 மின்னஞ்சல் (**pointpedrops@gmail.com**) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணிமுதல் பி.ப.14.00 மணிவரை, 11.07.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணத்தை ஆங்கில மொழியில் செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை. புலோலி எனும் இடத்திலிருந்து. 21.06.2017திகதி தொடக்கம்11.07.2017 வரை காலை 09.00மணிக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2.000/-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி எனும் முகவரிக்கு 13.07.2017 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை தனித்தனியாக இரு கடித உறையிலிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது பருத்தித்துறைப் பிரதேச சபையின் கேள்விப் பெட்டியில் நேரடியாக இடப்படுதல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது- 30.08.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-12 | கெருடாவில் 3ஆம் சந்தி (ஆலடி அம்மன்) வீதி | 1.735 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-13 | ஆனைவிழுந்தான் திருமால்புரம் வீதி | 0.608 | 2மாதம் | C 9 | 7000.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-14 | அம்பன் குடியிருப்பு வீதி | 1.737 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-15 | மணற்காடு பொற்பதி இணைப்பு வீதி | 1.738 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-16 | ஆழியவளை சுனாமி குடியிருப்பு வீதி | 1.738 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-17 | வெற்றிலைக்கேணி (குடியிருப்பு) வீதி | 1.738 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-18 | துன்னாலை ஊரெல்லை வீதி | 1.739 | 2மாதம் | C 9 | 17500.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-19 | பாலையடி சோழகிணற்றடி வீதி | 1.217 | 2மாதம் | C 9 | 12200.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-20 | கற்கோவளம் கடற்கரை வீதி | 0.869 | 2மாதம் | C 9 | 8700.00 | 27.09.2017 |
| NP/14/41(11)/2/7/ PSDG/2017-21 | நறுவிலி வீதி | 0.869 | 2மாதம் | C 9 | 8700.00 | 27.09.2017 |

10.கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 04.07.2017 திகதி 14.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தலைவர்,
[illegible]சபை,
பருத்தித்துறை பிரதேச சபை,புலோலி,
வடக்கு மாகாணம்.

(சி-8826) 21.06.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நிலச்சரிவில் சிக்கினர் மக்கள் மீட்டெடுத்து உதவியது இராணுவம்



(குவாஹத்தி)

அருணாச்சல பிரதேசம் மாநிலம், பலுக்பாங்கில் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் இருந்து சுமார் 200-க்கும் மேற்பட்டோரை இராணுவம் மீட்டுள்ளது.

இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், மேகாலயா உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்துவந்தது. இதனால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அருணாச்சல பிரதேசத்தின் பலுக்பாங் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதனையடுத்து பலுக் பாங்க் பகுதியில் இருந்து சுமார் 7 கிலோமீற்றர் தொலைவில் மக்கள் சுமார் 10 மணி நேரத்திற்கு மேலாக எந்தவித உதவியுமின்றிக் காத்துக் கிடந்தனர். அவர்களுக்கு வீதி இணைப்பும் தடைப்பட்டது.

இதனையடுத்து நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை மீட்கும் பணிகளில் இராணுவ வீரர்கள் மருத்துவ உதவி பொருட்களுடன் விரைந்தனர்.

பலுக்பாங் பகுதியில் இருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட மக்களை இராணுவ வீரர்கள் அபாயகரமான ஆற்றுப் பாலங்களின் வழியாக காப்பாற்றினர். அதில், 70 பெண்கள் மற்றும் 50 குழந்தைகள் அடங்குவர்.

பின்னர், மக்களுக்கு மருத்துவ மற்றும் உணவு பொருட்களை இராணுவ வீரர்கள் வழங்கினர். மேலும், வீதிகளை சீரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (3-8)

## ஜனாதிபதி தேர்தல் விவகாரத்தில் சசிகலாவே முடிவெடுப்பார் - தினகரன்



(சென்னை)

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பதை சசிகலா தான் முடிவு செய்வார" என்று அ.தி.மு.க. (அம்மா) கட்சி துணை பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. (அம்மா) கட்சி துணை பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், சென்னை பெசன்ட்நகர் இல்லத்தில் நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது,

ஜனாதிபதி தேர்தலில் பீகார ஆளுநர்ராம்நாத்கோவிந்தை வேட்பாளராக மத்திய பா.ஜ.க. அரசு அறிவித்து உள்ளதே? அவருக்கு நீங்கள் ஆதரவு அளிப்பீர்களா? என்று நிருபர்கள் கேட்ட போது ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு தருவது? என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலாதான் முடிவு செய்வார். அவரது முடிவு தான் இயக்கத்தின், தொண்டர்களின் முடிவு ஆகும் என்று பதிலளித்தார்.

மேலும் உங்களை கட்சியில் இருந்து ஒதுக்கி வைத்து விட்டதாக கூறப்பட்டு வருகிறதே? என்று கேட்கப்பட்ட போது, என்னை கட்சியில் இருந்து நீக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு மட்டுமே உண்டு. வேண்டும் என்றால் நான்தான் பிறரை கட்சியில் இருந்து நீக்க முடியும். அது தான் உண்மை என்று அவர் பதிலளித்தார். (3-8)

## சீனாவில் களைகட்டும் சர்வதேச யோகா தினம்



(பீஜிங்)

சர்வதேச யோகா தினம் இன்று வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ள நிலையில், சீனாவிலும் சர்வதேச யோகா தினத்தை சிறப்பிக்க நாடு முழுவதும் நடைபெறும் விழாக்களில் சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச யோகா தினத்தின் மூன்றாம் ஆண்டு கொண்டாட்டங்கள் சீனாவில் வெகுவிமர்சையாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பீஜிங் நகரின் சீனப்பெருஞ் சுவர், நாட்டின் முக்கிய நகரங்களில் உள்ள பூங்காக்களில் யோகா சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. 2015-ம் ஆண்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டதைத் தொடர்ந்து யோகா சார்ந்த நிகழ்வுகள் சீனாவில் பிரபலமாகியுள்ளன.

இந்தியா, சீனா மட்டுமன்றி ஜப்பான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நியூசிலாந்து கியூபா உள்ளிட்ட நாடுகளில் யோகாதினக் கொண்டாடங்கள் தொடங்கியுள்ளன.

அமெரிக்காவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை வளாகம் யோகா தினத்தை குறிக்கும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதுதவிர பிரான்ஸ், அமெரிக்காவின் வோஷிங்டன், ஹங்கேரி, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் யோகா தினத்தை கொண்டாட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (3-8)

## தற்காலிக முகாம் அ... தற்கொலைப்படை தா...

### நைஜீரியாவில் 17 பேர் பலி



(மைடுகுரி)

நைஜீரியா நாட்டின் போர்னோ மாவட்டத்தில் வீடிழந்தோருக்கான தற்காலிக முகாம் அருகில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று போகோஹறாம் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். கடந்த எட்டாண்டுகளாக இவர்களின் கொலைவெறிக்கு சுமார் 20 ஆயிரம் மனித உயிர்கள் பலியாகியுள்ளன.

இதுதவிர, இவர்களின் வெறியாட்டத்தால் வீடுகள் மற்றும் இதர சொத்துக்களை பறிகொடுத்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகளுடன் அந்நாட்டு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் அமைத்துள்ள தற்காலிக முகாம்களில் அகதிகளாக தங்கியுள் ளனர்.

அவ்வகையில், நைஜீரி யாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாவட்ட தலைநக ரான மைடுகுரி நகரையொட்டி இருக்கும் கோஃபா என்ற கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தற்காலிக முகாமில் பலர் தங்கி

## லண்டன் மசூதி தாக்குதல் குற்றவாளியின் அடையாளத்தை வெளியிட்ட பொலிஸார்



(லண்டன்)

பிரிட்டன், தலைநகர் லண்டனில் மசூதி அருகே தொழுகை முடித்துவிட்டு வந்தவர்கள் மீது வாகனத்தை மோத விட்டு தாக்குதல் நடத்தியவரின் அடையாளத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனின் வடக்கு லண்டனில் செவன் சிஸ்டர்ஸ் ரோடு உள்ளது. புனித ரமழான் மாதம் என்பதால் இங்குள்ள மசூதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் தொழுகை முடிந்து ஏராளமானவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வேகமாக வந்த ஒரு வாகனம் தொழுகை முடிந்து வீடு திரும்பி கொண்டிருந்தவர்கள் நடந்து சென்ற பாதைக்குள் புகுந்தது. இதை க்ண்டு அதிர்ச்சி அடைந்த பலர் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். இச்சம்பவத்தால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இந்த திடீர்த்தாக்குதலில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதைத்தொடர்ந்து அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் விரைந்து சென்று வாகனச் சாரதியைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர் கார்டிப் நகரைச் சேர்ந்த டெரன் ஆஸ்பர்ன் (45) என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்பு லண்டன் பாலத்தில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர், இஸ்லாமியர்கள் மீதுள்ள வெறுப்பால் நிகழ்த்தப்படும் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக லண்டன் மேயர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ஆப்... தீவி...

(காபூல்)

## அமெரிக்க துப்பாக்ச... ஆண்டுக்கு 1300 கு...

(நியூயோர்க்)

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்துக்கு ஆண்டுக்கு 1300 குழந்தைகள் பலியாகின்றனர். 5800 பேர் காயம அடைகிறார்கள்.

அமெரிக்காவில் தனிநபர் துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

வீட்டில் பெற்றோர் வைத்திருக்கும் துப்பாக்கிகளை எடுத்து விளையாடும் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே அங்கு துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்து வருகிறது.

அதைத்தொடர்ந்து அங்கு துப்பாககியால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சமீபத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்

## ஐ.எஸ். தீவிரவாதிகளை குறி... சிரியா மீது ஈரான் ஏவுகணைத் ...

(தெஹ்ரான்)

ஐ.எஸ். தீவிரவாதிகளை குறி வைத்து சிரியா மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு மட்டுமல்ல அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## அருகில் ...தாக்குதல்



வருகின்றனர்.

இந்த முகாமின் அருகாமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமார் 9 மணியளவில் போகோஹராம் தீவிர வாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 17 பேர் உடல் சிதறி, பரிதாபமாக உயிரிழந்தனர். (3-8)

## ட்ரம்பை ஒருபோதும் காதலிக்கவில்லை

### பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி மனைவி மறுப்பு

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

டிரம்பை ஒருபோதும் நான் காதலிக்கவில்லை' என பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதியின் மனைவியும், மொடல் அழகியு மான கர்லா புரூனி மறுப்பு தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோசியின் மனைவியும் மொடல் அழகியும் பிரபல பாடகியுமான கர்லா புரூனி (வயது 49) தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் காதல் வயப்பட்டிருப்பதாகவும், ட்ரம்பின் 2-வது மனைவி மார்லா மாப்பில்ஸ் விவாகரத்துக்கு இவர் காரணமாக இருந்ததாகவும் கூறப்பட்டது.

அமெரிக்க 'ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது இது பரபரப்பாக பேசப்பட்டது.

ஆனால் அதை அப்போது டிரம்ப் மறுத்திருந்தார்.

பின்னர் பேட்டி அளித்த ட்ரம்ப் அது உண்மை என தெரிவித்தார்.

அதற்கு தற்போது கர்லா புரூனி மறுப்பு தெரிவித்துள்ளார். அவரை காதலித்ததாக ட்ரம்ப் எவ்வாறு கூறினார் என எனக்கு தெரியவில்லை. "ட்ரம்பை நான் ஒரு போதும் காதலித்தது இல்லை" எனத் தெரிவித்துள்ளார். (3-8)

## இந்தோனேசியாவில் சிறையிலிருந்த 4 வெளிநாட்டு கைதிகள் தப்பியோட்டம்

(பாலி)

இந்தோனேசியா சிறையில் இருந்து இந்தியர் உட்பட 4 வெளிநாட்டு கைதிகள் தப்பியோடிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவில் உள்ள சிறைகளில் அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதாலும், போதிய பராமரிப்பு இன்மையாலும் கைதிகள் அடிக்கடி தப்பி ஓடும் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்தவகையில் சுமாத்ரா தீவில் உள்ள ஒரு சிறையில் இருந்து கடந்த மாதம் மட்டும் 440 கைதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

அங்குள்ள பாலி தீவின் தலைநகரானதென்பாரிலுள்ள கெரோபோகன் சிறைச் சாலையில்நேற்று முன்தினம் காலையில் பொலிஸார் வழக்கமான சோதனை நடத்தினர். அப்போது 4 கைதிகள் தப்பியோடியது தெரியவந்தது. சையது முகமது செத் (வயது 31) என்ற இந்தியரும், அவுஸ்திரேலியா, பல்கேரியா, மலேசியா நாடுகளை சேர்ந்த தலா ஒருவரும் என 4 பேர் தப்பியுள்ளனர்.

சுவரில் இருந்த 50க்கு 70 செ.மீ. துளை மூலம் அவர்கள் வெளியேறி, அதனுடன் இணைந்துள்ள 15 மீற்றர் நீளம் கொண்ட குடிநீர் குழாய் வழியாக பிரதான சாலையை அவர்கள் அடைந்திருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

தப்பியோடிய சையது முகமது செத் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் 14 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## இந்தியா – ஆப்கான் இடையே சரக்கு விமான சேவை ஆரம்பம்

(காபூல்)

இந்தியா-ஆப்கானிஸ்தான் இடையே முதல் சரக்கு விமான சேவை தொடங்கியது. காபூல் நகரில் இருந்து டில்லி வந்த விமானத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வரவேற்றார்.



இந்தியா-ஆப்கானிஸ்தான் இடையே முதல் சரக்கு விமான சேவை நேற்று முன்தினம் தொடங்கியது. ஆபகானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி இந்த விமான சேவையை நேற்று முன்தினம் காபூல் விமான நிலையத்தில் தொடங்கி வைத்தார். அப்போது, ஆப்கான் அமைச்சர்கள் சிலரும், அந்நாட்டிற்கான இந்திய தூதர் மன்ப்ரீட் வோஹ்ரா ஆகியோர் உடன் இருந்தனர்.

இதில் மருத்துவ உபகரணங்கள், தண்ணீர் துாய்மைப்படுத்தும் உபகரணங்கள் உள்ளிட்டவை விமானத்தில் அதிக அளவில் கொண்டு வரப்பட்டது.

காபூல் நகரில் இருந்து 100 தொன் பொருட்களுடன் புறப்பட்ட இந்த விமானம் நேற்று முன்தினம் இரவு தலைநகர் டில்லி வந்தடைந்தது.

டில்லியில் விமானம் வந்தடைந்த போது, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அதனை வரவேற்றார். அப்போது சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் கண பதி ராஜு, வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அக்பர், இந்தியாவிற்கான ஆப்கான்தூதர்ஷைதா அப்தலி ஆகியோர் உடனிருந்தனர். (3-8)

## ...ப்கான் இராணுவ வீரர்கள் மீது ...விரவாதிகள் தாக்கியதில் 8 பேர் பலி



...பூல்)

...கானிஸ்தான் நாட்...ராம் மாவட்டத்தில் ... அமெரிக்க இரா... முகாமில் பணியா...ரும் வீரர்கள் மீது ...வாதிகள் நடத்திய ...கிச் சூட்டில் 8 பேர் ...ழந்துள்ளனர்.

...கானிஸ்தான் நாட்...னநாயக முறையில் ...தெடுக்கப்பட்ட அர...திர்ப்பு ...விக்கும் வகையில் தலிபான் ...வாதிகள் ...தொடர்ந்து பல தாக்குதல்களை ... வருகின்றனர்.

...தைத்தொடர்ந்து, அந்நாட்டில் உள்ள ...று மாகாணங்களில் தீவிரவாதிகளை ...டையாடும் பணியில் ஆப்கானிஸ்தான் ...ுவத்துடன் அமெரிக்கப் படையினரும் ...ணந்து ஈடுபட்டு வருகின்றனர்.

...கானிஸ்தான் நாட்டின் பக்ராம் மாவட்... ஆப்கான் வீரர்களுடன் சேர்ந்து அமெரிக்க இராணுவப் படையினர் முகாம் அமைத்து செயலாற்றி வருகின்றனர். இந்நிலையில், இராணுவ முகாமில் பணியாற்றுவதற்காக ஆப்கான் வீரர்கள் நேற்று முன்தினம் இரவு கும்பலாக சென்று கொண்டிருந்த வேளை அவர்களை இடைமறித்த தீவிரவாதிகள் இராணுவ வீரர்களை நோக்கி துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டனர்.

இந்த திடீர் தாக்குதலில் எட்டு வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்த தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (3-8)

## ஆயுதங்களுடன் வந்த கார் பொலிஸ் வாகனத்தில் மோதியது

(பாரீஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் மர்மநபர் ஒருவர் காரில் ஆயுதங்களுடன் பொலிஸ் வாகனம் மீது வேண்டுமென்றே மோதி தாக்குதல் நடத்தியுள்ளார்.



பிரான்ஸ் தலைநகர் பாரீசின் மையப்பகுதியில் உள்ள சாம்ப்ஸ் லையீஸ் பகுதியில் நேற்று முன்தினம் மர்மநபர் ஒருவர் வெள்ளை நிற காரில் ஆயுதங்களுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருநத பொலிஸ் வாகனம் மீது வேண்டுமென்றே மோதி தாக்குதல் நிகழ்த்தியுள்ளார். இதையடுத்து, மர்மநபர் வந்த காரில் இருந்து நெருப்பு மற்றும் புகை கிளம்பியது. சம்பவம் குறித்து தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் அந்த இடத்தை முற்றுகையிட்டு போக்குவரத்தை தடை செய்தனர். காரைச் செலுத்தி வந்த மர்மநபர் இறந்த நிலையில் காரில் கிடந்துள்ளார். மேலும், காரினுள் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றினர்.

இது தீவிரவாத தாக்குதலாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ள நகர பொலிஸார் காரைச் செலுத்தி வந்த மர்மநபர் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்ற னர்.

இத்தாக்குதலை யடு த்து, பிரான்ஸ் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (3-8)

## ...கி கலாசாரத்துக்கு ... குழந்தைகள் பலி

...டது. நோய் தடுப்பு மற் றும் பாதுகாப்பு மையங்களை சேர்ந்த நிபுணர்கள் இதில் ஈடுபட்டனர்.

அதில் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தால் ஆண்டுக்கு சராசரி 1300 குழந்தைகள் பலியாகின்றனர். 5800 குழந்தைகளுக்கு காயம் ஏற்ப டுகிறது. இவர்களில் 82 சத வீதம் சிறுவர்கள் ஆவர். துப்பாக்கிச் சாவுகளில் பாதி அளவு கொலை வழக்குகளாகும். அதே நேரத்தில் 38 சத வீதம் தற்கொலை வழக்காக பதிவு செய்யப்படுகிறது.

மன அழுத்தத்துக்கு ஆளாகும் குழந்தைகள் வீட்டில் இருக்கும் துப்பாக்கியை எடுத்து சுட்டு தற்கொலை செய்து கொள்கின்றனர். மற்றும் காதல் தோல்வியாலும், குடும்பத்தினரிடையே ஏற்படும் பிரச்சினையாலும் இத்தகைய தற்கொலைக்கு ஆளாகின்றனர். (3-8)

## ...றிவைத்து ...் தாக்குதல்

உள்நாட்டு போர் நடந்து வரும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் உள்ளது.

அவர்களை ஒடுக்க அமெரிக்காவின் கூட்டுப் படைகள் முகாமிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் சிரியா மீது ஈரான் நேற்று முன்தினம் திடீரென ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி யது.

மேற்கு மாகாணங்களான கெர்மான்ஷா மற்றும் குர்திஸ்தானில் இருந்து வீசப்பட்ட ஏவுகணைகள் டெர்ல்-ஷோயர் நகரம் மீது விழுந்தது.

இவை ஷோல் பாகர் ரக ஏவுகணையாகும். இந்த ஏவுகணை தாக்குதலினால ஏற்பட்ட சேத விபரங்கள எதுவும் வெளியாகவில்லை.

இந்த ஏவுகணைகள் ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து வீசப்பட்டன.

இதன் மூலம் கடந்த 15 ஆண்டுகளில் ஒரு நாட்டின் மீது ஈரான் அணு ஆயுத தாக்குதல் நடத்தியது இதுவே முதல் முறையாகும்.

அதே நேரத்தில் உள்நாட்டு போரில் சிக்கி தவிக்கும் சிரியா மீது தாக்குதல் நடத்துவதும் இதுவே முதல முறையாக கருதப்படுகிறது.

இத்தாக்குதல் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு மட்டுமல்ல அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியாவுக்கு மறைமுக எச்சரிக்கை என உலக நாடுகள் கருதுகின்றன. (3-8)

...வுக்கு மறைமுக எச்சரிக்கை என உலக நாடுகள் கருதுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடமிருந்து அதிக கடனை இலங்கை 2016 இல் பெற்றது

## அமெரிக்கா அதிக நன்கொடை வழங்கியது

(கொழும்பு)

**2016ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவு நன்கொடைகளை வழங்கிய நாடாக அமெரிக்காவும் அதிகளவு கடன்களை வழங்கிய நாடாக சீனாவும் இருப்பதாக அரசாங்கத்தின் அதிகாரபூர்வ புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

2016ஆம் ஆண்டில் இலங்கைக்கு அமெரிக்கா, 23.83 மில்லியன் டொலரை திருப்பிச் செலுத்தாத நன்கொடையாக வழங்கியுள்ளது. இது கடந்த ஆண்டில் இலங்கைக்கு கிடைத்த நன்கொடைகளில் 44 வீதமாகும்.

அதேவேளை, இலங்கைக்கு கடந்த ஆண்டு, 440.76 டொலர் கடன்களை வழங்கி, அதிக கடனை வழங்கிய நாடாக சீனா விளங்குகிறது.

2016ஆம் ஆண்டு 1.586.2 மில்லியன் டொலரை வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் முகவர் அமைப்புகளிடம் இருந்து பல்வேறு திட்டங்களுக்கான கடனாக இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது.

உலக வங்கி 354.86 மில்லியன் டொலர் கடன்களையும், 9.28 மில்லியன் டொலர் கொடைகளையும் வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, 336.63 டொலர் கடன்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஜப்பான், 159.7 மில்லியன் டொலர் கடன்களையும், 7.01 மில்லியன் டொலர் கொடைகளையும் வழங்கியிருக்கிறது.

அடுத்து, ஜேர்மனி, 5.43 மில்லியன் டொலர் கடன்களையும், 3.98 மில்லியன் டொலர் கொடைகளையும் இலங்கைக்கு வழங்கியது.

ஐ.நா.முகவர் அமைப்புகளால், கடந்த ஆண்டு, 22.63 மில்லியன் டொலர் கடன்களும், 9.7 மில்லியன் டொலர் கொடைகளும் அளிக்கப்பட்டன.

இந்தியா 44.7 மில்லியன் டொலர் கடன்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக நிதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

## முன்கூட்டியே கொழும்பை விட்டு வெளியேறியது அமெ.போர்க்கப்பல்

அனர்த்தத்துக்குப் பிந்திய உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க போர்க்கப்பல், ஒரு வாரத்துக்கு முன்னதாகவே கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் லேக் எரி என்ற வழிகாட்டல் ஏவுகணைப் போர்க்கப்பல், கப்டன் மக் பேர்சன் தலைமையிலான சுமார் 300 மாலுமிகளுடன், கடந்த 11ஆம் திகதி கொழும்புத் துறைமுகம் வந்தது.



அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், உதவிப் பணிகளை மேற்கொள்ளவே இந்தப் போர்க் கப்பல் கொழும்புக்கு வந்திருந்தது.

இந்தக் கப்பலில் இருந்த அமெரிக்க கடற்படையினர், இலங்கை கடற்படையின் மரைன் படையினருடன் இணைந்து, காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களில் பல்வேறு உதவிப் பணிகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சியிலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், யுஎஸ் எஸ் லேக் எரி போர்க்கப்பல் நேற்று முன்தினம் தமது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு துறைமுகத்தை விட்டு புறப்பட்டுச் சென்றது.

இந்தப் போர்க்கப்பல் இரண்டு வாரம் இலங்கையில் தரித்து நிற்கும் என்றும் ஜூன் 25ஆம்திகதியே கொழும்பு துறைமுகத்தை விட்டுப் புறப்படும் என்றும், இலங்கை கடற்படையினர் அறிவித்திருந்தனர். எனினும், முன்கூட்டியே அமெரிக்க போர்க்கப்பல் புறப்பட்டுச் சென்றமைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. (இ-3)

## சறுக்கியது விவசாயம்!- சரிந்தது வளர்ச்சி

2017ஆம் ஆண்டின், முதல் காலாண்டில் விவசாயத்துறையில் 3.2 சதவீதம் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாகவே, இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு முதல் காலாண்டில், தெங்கு பயிர் செய்யப்படும் பிரதேசங்களில் கடுமையான வரட்சி காரணமாக, தேங்காய் உற்பத்தி 53.1 சதவீதமாகவும் எண்ணெய் பயிர்கள் உற்பத்தி 10.2 சதவீதமாகவும் குறைவடைந்தது.

இறப்பர் உற்பத்தி 17.2 சதவீதமாகக் குறைவடைந்ததுடன், தேயிலை உற்பத்தியானது 5.7 சதவீதமாகக் குறைந்தது. அத்துடன், வனவியல் மற்றும் மரம் வளர்ப்பு 9.3 சதவீதமாகவும் விலங்குப்பொருட்கள் உற்பத்தி 6.9 சதவீதமாகவும் நறுமணப்பொருட்கள் பயிர்ச்செய்கை 6.1 சதவீதமாகவும் மீன்பிடித்துறை 5.3 சதவீதமாகவும் குறைவடைந்திருந்தது என்றும் அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-3)

## 1000 கிலோ எடை கொண்ட பொருட்களை ஜப்பானிலிருந்து அள்ளி வந்தார் மகிந்த



(கொழும்பு)

அண்மையில் ஜப்பானுக்குச் சென்றிருந்த, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பும் போது, நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமான பொருட்களை விமானத்தில் எடுத்து வந்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. சுமார் 1000 கிலோ எடை கொண்ட பொருட்களை மகிந்த கொண்டு வந்துள்ளார். அவருடன் சென்ற ஏனையோரும் பெருமளவு பொருட்களை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக எவ்வித மேலதிக கட்டணங்களையும் [illegible] காரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இவ்வாறு கொண்டுவரப்பட்ட பொருட்கள் என்னவென்பது தொடர்பில் தகவல் வெளியே செல்லாத வகையில் விமான நிலையம் மற்றும் சுங்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். நட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் உயர்மட்ட முகாமையாளர் பதவியில் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமானவர்கள் செயற்படுகின்றார். இதன் காரணமாக ராஜபக்ஷர்களின் விமான பயணங்களின் போது இவ்வா[illegible] கவனிப்புகள் [illegible]படுவதாக கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சுதந்திரம் கொடுத்திருக்கிறீர்களா?

என் பள்ளி நாட்களில் என் நண்பனின் தந்தை ஒருவர் என் நண்பனை நடத்திய விதம் பற்றி நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

அவன் மீது ஒரே கண்டிப்பு. கண்டிப்போ கண்டிப்பு. நான் என் நண்பனைப் பார்க்கப் போனால், எதுக்காக வந்தே? என்ன பேசப் போறே! என்றெல்லாம் கேட்பார். பல நேரங்களில் என்னைத் திருப்பி அனுப்பிவிடுவார். மற்ற சில நண்பர்களுக்கு இதை விட மோசமான கவனிப்பு நடந்திருக்கிறது.

இன்றைய நிலைமை என்ன? காலச் சக்கரம் சுழலும் போது கீழே இருப்பது மேலேயும், மேலே இருப்பது கீழேயும் போகத்தானே வேண்டும்? அதே அப்பாவுக்குச் கொஞ்சமும் மரியாதை இல்லை. பையனும் தறுதலையாகிப் போனான்.

மிகக் கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட பிள்ளைகளின் கதி பெரும்பாலும் இதுதான். இதை நிரூபிக்கப் போவதில்லை. உங்கள் வட்டத்தில் பல உதாரணங்களை நீங்களே கண்கூடாகப் பார்ப்பீர்கள். ஒருத்தி தன் கணவனையோ, ஒருவன் தன் மனைவியையோ, கொஞ்சமும் சுதந்திரம் கொடுக்காமல் நடத்தினால் அதன் விளைவும் இப்படித்தான் எதிர்மறையா[illegible] முடியும்.

ஒரு கடையின் உரிமையாளர் தன் நிறுவன ஊழியருக்கு எந்தவிதமான சிறு முடிவையும் எடுக்க உரிமை கொடுக்க மறுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு ஏதோ வேலை பார்ப்போம் என்றும், முதலாம் திகதி எப்போ வரும் என்றுதான் தோன்றும். வேறு சிந்தனைகள் வராது. தான் வேலை செய்யும் கடையின் வருமானத்தை எப்படிப் பெருகச் செய்வோம். முதலாளி இல்லாத நேரத்தில் வியாபாரத்தை எப்படி விருத்தி செய்வோம் என்ற நினைப்பே வராது. மாறாக, வியாபாரம் சரிந்து போக என்ன செய்யலாம் என்று கூடச் சிந்திப்பான்.

சுதந்திர உணர்வு என்பது மனிதனின் அடிப்படையான இரத்தம். அது கட்டிப் போடப்படும் போது அதை மீற வேண்டும், உடைக்க வேண்டும் என்கிற வேகம்தான் இயல்பாக எழும். அது மட்டுமல்ல, அது மூளையை மழுங்கச் செய்து சிறு வட்டத்திற்குள்ளே ஒருவனை வலம் வரச் செய்யும். திறமைகளையும் முடக்கி விடும். படைப்பாற்றலை (Creativity) நசுக்கும், ஒவ்வொன்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்க்கும் சார்பு மனப்பான்மையை தோற்றுவிக்கும். அப்புறம் சோம்பல்தனத்திற்கும் முட்டாள் தனத்திற்கும் சுதந்திரமின்மையே பெரியதொரு காரணமாகச் சொல்லப்படும்.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அணை தேவை தான். ஆனால் சரியான நேரத்தில் அணை திறந்து விடப்பட்டால் அது அணைக்கே ஆபத்தை ஏற்படுத்தி விடும். சுதந்திர உணர்வு ஏகமாய் அடக்கி வைக்கப்படும் போது அது முரட்டுத்தனமாய் வெளிப்படும்.

எதிலெதில் சுதந்திரம் எடுத்துக் கொள்ளலாம். எதிலெதில் கூடாது என்கிற வரையில் நாம் தெளிவாக இருப்பதோடு, நம் கட்டுப்பாட்டிற்குள் இருப்பவர்களிடம் அவற்றைத் தெரிவிக்க வேண்டும். மிதமிஞ்சிய கட்டுப்பாட்டுக் கயிறுகளை நாம் பயன்படுத்தினால் அவை காலத்தில் அறுத்தெறியப்படுவதோடு நமக்கே சவுக்குகளாக மாறும்!

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2005 வினாத்தாள் பகுதி-2


♦ 15 தொடக்கம் 32 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடு இடுக.

15) ரூபாய் 5.00 முத்திரையை ஒட்டி அஞ்சலில் அனுப்பவேண்டிய சாதாரண கடிதம் ஒன்றினைக் கடித உறையினை ஒட்டாது அஞ்சலில் அனுப்புவதற்கான முத்திரைக் கட்டணம் எவ்வளவு?
1) ரூபாய் 3.00 2) ரூபாய் 3.50 3) ரூபாய் 4.00 4) ரூபாய் 4.50

16) பின்வரும் மலர் வகைகளிடையே கொத்துகளாகப் பூக்கும் மலர் வகை எது?
1) சூரியகாந்தி 2) அலரி 3) காட்டுமல்லிகை 4) நித்தியகல்யாணி

17) மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் மூடை வடிவில் அமைந்த உபகரணத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?
1) நாம்புவ 2) கரைவலை 3) அத்தாங்கு 4) மடி


18) பின்வரும் கருவிகளிடையே ஆணியை இறுக்கவும் கழற்றவும் பயன்படுத்தத்தக்க மிகப் பொருத்தமான உபகரணம்?



1) 2) 3) 4)

19) மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப்பொருத்தமான முதலுதவியாக அமைவது.
1) சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்
2) ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்
3) தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச் செய்து காற்றுப்பட விசிறுதல்
4) தலையை நன்கு கீழ் நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செயதல்

20)



மேலே காட்டப்பட்டுள்ள உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர் யாது?
1) பெருநாய் 2) விருச்சிகம் 3) கலப்பை 4) கார்த்திகை


21) நான்கு மாணவர்கள் ஒரு நத்தையை அவதானித்து வரைந்த வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் நத்தையின் உறுப்பியல்புகளை மிகச் சரியாகக் காட்டும் உரு எது?



1) 2) 3) 4)


22) பேருந்துத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்திலிருந்து இறங்கிய பிரயாணி ஒருவர் அந்தப் பேருந்தின் முன்னே பாதையைக் கடந்து செல்வது ஆபத்தானதாய் இருப்பதற்குக் காரணம்.
1) வலப்பக்கத்தால் வரும் வாகனங்களைத் தெளிவாகக் காணமுடியாமை.
2) இடப்பக்கத்தால் வரும் வாகனங்களைத் தெளிவாகக் காணமுடியாமை.
3) வீதியின் இருபக்கங்களையும் தெளிவாகக் காணமுடியாமை.
4) பேருந்தின் சாரதிக்குப் பிரயாணியைக் காணமுடியாமை.

23) மாணவர்குழு ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு செய்த ஓர் ஒழுங்கமைப்பில் ஆணியின் தலையருகில் குண்டூசியைக் கொண்டு சென்றபோது அது ஆணியில் ஒட்டிக்கொண்டது.




ஆணியைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்
1) பித்தளை 2) அலுமினியம் 3) இரும்பு 4) பிளாத்திக்கு

24) மிகச் சரியான விதத்தில் உலர் மின்கலங்கள் இடப்பட்டுள்ள மின் சூளைக் காட்டும் உரு



1) 2) 3) 4)

25) பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவில் உள்ளன. வேறுபட்ட வடிவத்தை உடைய தாவர இலை எது?
1) வெற்றிலை 2) மிளகு 3) வட்டக்கண்ணி 4) திப்பிலி

26) தேசப்படங்களில் நதிகளைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
1) கபிலம் 2) நீலம் 3) ஊதா 4) பச்சை


27) பின்வரும் பொருட்களிடையே பித்தளைப் பாத்திரங்களைத் துப்புரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமானது எது?
1) பழப்புளி 2) தேங்காய்ப்பூ 3) தேயிலைச் சக்கை 4) சுட்ட உமி

28) விளக்குத்திரி வழியாக விரைவில் மேல்நோக்கிச் செல்லும் எண்ணெய் வகை.
1) தேங்காய் எண்ணெய் 2) கடுகு எண்ணெய் 3) பசுநெய் 4) மண்ணெண்ணெய்

29) ஒத்த நிலைமைகளின் கீழே பயிரிடப்படும் பின்வரும் வித்துக்களிடையே விரைவில் முளைக்கும் வித்துவகை.
1) மிளகாய் 2) கடுகு 3) பாகல் 4) வெண்டி




உருவில் தரப்பட்டுள்ள மலர்க் கிளையினை ஆடையில் தைக்கும்போது அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள பகுதியைத் தைப்பதற்குப் பின்வரும் அலங்காரத் தையல் முறைகளில் மிகப் பொருத்தமான தையல் முறை.



1) 2) 3) 4)

31) இலங்கையின் தேசியக்கொடியைச் சுற்றிவர நான்கு பக்கங்களிலுமுள்ள மஞ்சள் நிறக் கீற்றுக் காட்டுவது.
1) சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ள நாடு என்பதை
2) நாட்டில் வாழும் இனங்களின் ஒற்றுமையை
3) நாட்டில் முக்கிய இனங்கள் நான்கு உள்ளன என்பதை
4) நாட்டில் நான்கு மதங்களைப் பின்பற்றுவோர் வாழ்கின்றனர் என்பதை

32) இங்கையின் தேசிய விளையாட்டைக் காட்டும் உரு.



1) 2) 3) 4)

33) இலங்கை பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.
i) ...................................... ii) ......................................

♦ அடைப்புக்குள்ளிருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
தேசிய கீதத்தை இசைக்கும் சந்தர்ப்பங்களில்

34) உடம்பை நிமிர்த்தி வைத்து கால்களை ( விரித்து/ ஒடுக்கி ) கைகளின் (விரல்களை மடித்து / விரல்களை நீட்டி ) நிற்றல் வேண்டும்.

35) தலை (நேராக முன்னோக்கி /நிலத்தை நோக்கி) இருக்கக் கண்களை ( திறந்தபடி மூடியபடி) நிற்றல் வேண்டும்.

♦ வீட்டிலும் வீட்டுத்தோட்டத்திலும் உலாவும் நான்கு பூச்சிகளின் வரிப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பெயர்களிலிருந்து அப்பூச்சிகள் ஒவ்வொன்றினதும் பெயரைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| வீட்டு ஈ | தேனீ | குளவி | கரப்பான் பூச்சி | வண்ணத்துப் பூச்சி |
| தும்பி | அந்து | இராமபாணம் | நெல் ஈ | |



36) .................... 37) .................... 38) ................ 39) .............

♦ ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொன்னாவரசு | கொன்றை | எலுமிச்சை | பலா | கறிவேப்பிலை | அகத்தி |
| வேம்பு | வல்லாரை | | | | |



40) ................. 41) ................. 42) ................. 43) .................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2005 வினாத்தாள் பகுதி-2

44) ஒரு பாடசாலைக்கு முன்னாலுள்ள வீதியிலே வலப்பக்கத்திற்கும் இடப்பக்கத்திற்கும் ஒரு மணித்தியாலத்தில் சென்ற வாகனங்கள் பற்றி மாணவர் குழு ஒன்று சேகரித்த தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.


| வாகனவகை | சென்ற வாகனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வலப்பக்கத்திற்கு | இடப்பக்கத்திற்கு |
| முச்சக்கரவண்டி | 55 | 47 |
| கார் | 60 | 44 |
| பேருந்து | 45 | 25 |
| லொறி | 25 | 20 |

i) பாடசாலையைக் கடந்து சென்ற முச்சக்கர வண்டிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

ii) இடப்பக்கத்துக்குச் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

iii) இடப்பக்கத்தைப் பார்க்கிலும் கூடுதலாக வலப்பக்கத்திற்குச் சென்ற கார்களின் எண்ணிக்கை யாது? ..............................

iv) வலப்பக்கத்துக்குச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் காட்டும் நிரல் வரைபை வரைக. (நிரல்களை நிழற்றுக)




v) வலப்பக்கத்துக்கு அதிகளவில் சென்ற வாகனவகையின் எண்ணிக்கைக்கும் குறைந்த அளவில் சென்ற வாகன வகையின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு? ..............................

45) விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும்போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களை முறையே எழுதுக.


i) .................................... ii) ....................................

46) ஒரு தோடம்பழத்தின் விலை ரூ. 8.50 எனில் 12 பழங்களுக்காகக் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? ரூபாய் ..............................


47) உறை ஒன்றில் 3 வீதம் 318 சவர்க்காரக் கட்டிகளைக் கடதாசி உறையினுள் போடுதல் வேண்டும். இதற்குத் தேவையான உறைகள் எவ்வளவு?....................

48) ஓர் இனிப்புப் பானப்போத்தல் 3 பேரை உபசரிக்கப் போதுமானது 17 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புப் பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?.......

49) ஒரு தினப்பதிவேட்டின் நீளத்தையும் அகலத்தையும் அளவு நாடாவினால் அளந்தபோது பெற்ற அளவுகள் அம்புக்குறியினால் கீழே காட்டப்பட்டுள்ளன.




50) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பெரிய சதுரத்தில் சிறிய சதுரங்கள் சில வரையப்பட்டுள்ளன. ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு 1 $cm^2$ எனில் பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?




.............................. $cm^2$

51) சுகந்தனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 10km ஆகும். அவன் பாடசாலைக்கு அத்தூரத்தின் 1/5 இனைச் சைக்கிளில் சென்றான். மீதித் தூரத்தைப் புகையிரதத்தில் சென்றான். அவன் புகையிரதத்தில் சென்ற தூரம் எவ்வளவு?

..............................


52) காட்டப்பட்டுள்ள உருவில் செங்கோணமுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



..............................

53) சந்திரனின் நிறை 25kg 600g ஆகும். அவனின் தந்தை சந்திரனைப்போல் இருமடங்கு நிறையுடையவர். தந்தையின் நிறை எவ்வளவு? ...........kg...........g

54) கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் B இன் முகத்தின் மீது காட்டும் வகையில் மணித்தியால முள்ளையும் நிமிட்முள்ளையும் வரைந்து காட்டுக.




55). பின்வரும் உரைப் பகுதியை வாசிக்க

அதிகாலையிலேயே மழை இருட்டு வானத்தை மூடியிருந்தது. முகுந்தன் பாடசாலை செல்வதற்கு அது தடையாக இருக்கவில்லை. அவன் புத்தகப் பையை அணைத்தபடி வீட்டிலிருந்து பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றான். ஒரேயடியாகப் பெருமழை பெய்யத் தொடங்கியது. மழைக்கு ஒதுங்குவதற்கு அயலில் வீடுகள் எதுவும் இருக்கவில்லை. முகுந்தன் தலையிலே புத்தகப் பையை வைத்துக்கொண்டு வேகமாக ஓடிச் சென்றான்.

முகுந்தனுக்கு நடந்திருக்கக்கூடுமென நீங்கள் கருதும் விடயங்கள் பற்றி கட்டுக்கோப்பான ஆறு வாக்கியங்களைக் கீழே தரப்பட்டுள்ள படங்களைப் பயன்படுத்தி எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய்- பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.



i) ..........................................................................................
ii) ..........................................................................................
iii) ..........................................................................................
iv) ..........................................................................................
v) ..........................................................................................
vi) ..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்வேல்


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- Acacja Farnensiana
Family- Mimosaceae
Engl-White babul

வெள்வேல் மூலிகையானது மரவகையைச் சார்ந்த மெல்லிய நிறைய கிளைகளைக் கொண்டது. சாம்பல் கலந்த இலைகள், கூட்டிலைகள் 2.5-5 சென்ரிமீற்றர் நீளமுடையது. இலையின் செதில்கள் மெல்லிய கோள வடிவினதாயும் கூரிய முனைகளைக் கொண்டதும் பச்சை கலந்த வெண்ணிறமுடையதாகவும் இருக்கும்.

ஆனால் மரத்தின் பட்டையானது வெள்ளை கலந்த மஞ்சள் நிறத்தில் காணப்படும். சிறிய வெண்ணிறம் கலந்த மஞ்சள் பூக்கள் அதிகம் காணப்படும். 15 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது.1-2 மீற்றர் விட்டமுடைய தண்டுப் பகுதியைக் கொண்டிருக்கும்.

இதன் வெண்ணிற மான தண்டுப் பகுதியின் பட்டையிலிருந்து பங்குனி மாதம் தொடக்கம் வைகாசி மாதம் வரை பிசின் சுரக்கின்றது. வருடத்திற்கு ஒரு முறை விதைகளை பெற்றுக் கொள்ளலாம்.

வெப்பமான பிரதேசங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். யாழ். மாவட்டத்தில் குடத்தனை பகுதியில் பரம்பல் அதிகம் மற்றும் ஓமந்தை பகுதியிலும் பரம்பல் அதிகம்.

விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். இதனுடைய இலை, பட்டை, பிசின், வேர், பிஞ்சுகள், காய்கள், வித்துக்கள் ஆகிய அனைத்தும் மருத்துவ குணமுடையவை.

இதன் இலைக் கொழுந்துகளை நன்றாக அரைத்து 5 கிராம் அளவு தினம் காலை, மாலை 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் குணமாகும்.

இதன் பட்டையை சிதைத்து 40 கிராம் அளவு எடுத்து இஞ்சி 5 கிராம் ஆகியவற்றை ஒன்று சேர்த்து இடித்து மண் பாண்டத்திலிட்டு 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக சுண்டக் காய்ச்சி வாய் கொப்பளித்து வர வாய்ப்புண், முரசு வீங்குதல், பற்சொத்தை, பல்வலி ஆகியன குணமாகும்.

இதன் குருத்து இலைகளை அவித்து அந்த நீரினால் தாங்கக் கூடிய சூட்டின் நாட்பட்ட புண்களை கழுவி வர புண்கள் விரைவில் ஆறும். அல்லது இதன் இலைக் கொழுந்துகளை நன்றாகக் கழுவி பட்டுப்போல அரைத்து புண்களிற்கு வைத்துக் கட்டினால் துர்நீரை வெளியேற்றி புண்களைக் குணமாக்கும்.

இதன் கொழுந்து இலைகளை நன்கு கழுவி அரைத்து 5 கிராம் அளவு எடுத்து சிறிது சீனி சேர்த்து 10 மில்லி நீரில் கலக்கி காலையில் மாத்திரம் உட்கொள்ள இருமல் தணியும்.

இதன் பட்டைகளை சிறிது சிறிதாக வெட்டி கழுவி நிழலில் உலர்த்தி நுண்ணிய பொடியாக இடித்து அதனை அரித்து அல்லது பட்டைகளைச் சுட்டு கரியாக்கி பொடித்து அதனைக் கொண்டு பற்களைத் தேய்த்து பற்பொடியாக பயன்படுத்தலாம்.

இப்படி தினமும் செய்து வர பல்லாட்டம், முரசால் இரத்தம் வடிதல் நீங்கி பற்கள் நல்ல வெண்மையான நிறத்தை கொடுத்து பற்களை பாதுகாக்க உதவும்.

இதனால்தான் ஆலும் வேலும் பல்லுக்குறுதி எனும் அனுபவமொழியைக்குறிக்கும்.

இதன் பொருள் ஆலம் குச்சி கொண்டு அல்லது கருவேல் அல்லது வெள்வேல் மரத்தினது பட்டைகளை பொடித்து பல்துலக்கி வர பற்கள் நோய்களற்று உறுதி பெறும் என்பது பொருளாகும்.

3 கிராம் அளவு இதன் பிசினை வாயிலிட்டு சுவைத்து அதனின்றும் ஊறும் இரசத்தை (சாற்றை) உள்ளெடுக்க வரட்டு இருமல், நெஞ்செரிவு, தொண்டை நோய் குணமாகும்.

இம் மரத்தின் பிசினை முட்டை வெள்ளைக் கருவுடன் சேர்த்து அரைத்து தீப்புண் மீது தடவி வர புண்கள் விரைவில் ஆறும்.

இதன் பிசினை நெய் விட்டு வறுத்து பொடியா னதும் 5 கிராம் அளவு இரவில் மட்டும் சாப்பாட்டின் பின் எடுத்து ஆட்டுப்பால் (வற்றக் காய்ச்சிய) 200 மில்லி அளவு அருந்தி வர உடல் உறுதியாக நோய்கள் வராமல் தடுக்க உதவும். 48 நாட்கள் வரை சாப்பிடலாம்.


பல்வலி, முரசு கரைதல், முரசால் இரத்தம் வடிதல் போன்றவற்றிற்கு வெள்வேல் பட்டை 200 கிராம், அறுகம் வேர் 200 கிராம் ஆகியவற்றை எடுத்து சிறிது சிறிதாக வெட்டி 1400 மில்லி நீர் விட்டு 350 மில்லியாக குறுக்கி குடிநீர் காய்ச்சி வடிக்க வேண்டும்.

அத்துடன் 350 மில்லி நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி சிறுதீயில் எரித்து தைலப்பதத்தில் நீர் வற்றும் வரை காய்ச்சி ஆறவிட்டு தலைக்கு பூசிவர மேற் படி நோய்கள் அனைத்தும் தீரும்.

வெள்வேலினது பிஞ்சுகள் பெண்களுக்கு ஏற்படும் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தும். எனவே பிஞ்சுகளை சாறு எடுத்து 8 மில்லி அளவு தேனுடன் கலந்து காலை, மாலை 3 நாட்கள் எடுக்கலாம்.

இதன் பிசின் 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

## சுனாமி முன்னெச்சரிக்கை மிதவையைக் காணவில்லை



சுனாமி அனர்த்தத்தை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்காக, அந்தமான் தீவுகளுக்கு அண்மையில், கடலின் மேற்பரப்பில், நிறுவப்பட்டிருந்த ஆழ்கடல் தரவு மிதவை மாயமாகிவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால், அந்த மிதவையிலிருந்து கடந்த பெப்ரவரி மாதம் 29ஆம் திகதியிலிருந்து எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லை.

அந்த மிதவை தொடர்பில் தகவல் கிடைத்தால், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்துக்கு 071935 3009 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு அந்த முகவரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

அந்தமான் தீவுகளுக்கு அண்மையில், சர்வதேச கடல் வலயத்தில், வடக்கு அகலக்கோடு 07.01 மற்றும் கிழக்கு அகலக்கோடு 88.07 என்ற இடத்திலேயே இந்த ஆழ்கடல் தரவு மிதவை நிறுவப்பட்டிருந்தது என்றும் அந்த முகவரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## வீட்டிற்குள் நுழைந்து பட்டப்பகலில் திருட்டு

(கரணவாய்)

தும்பளை 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றில் பட்டப்பகலில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 48 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் வீட்டில் உள்ளோர் வெளியில் சென்றதைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தோடு,கமரா உள்ளிட்ட பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## வெளிநாடு செல்ல திஸ்ஸவுக்கு அனுமதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கவுக்கு, வெளி நாடு செல்வதற்கான அனுமதியை, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

இந்த அனுமதியை, இந்த மாதம் 23ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கல்வி பயிலும் அவரின் மகளான துல்மினி அத்த நாயக்கவைச் சந்திக்கவே, இவ்வாறு அனுமதியைக் கோரியிருந்தார்.

அதைத் தொடர்ந்து, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

## கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும்

இளவேனில் கல்வி மேம்பாட்டுக் கழக மாணவர்கள் கௌரவிப்பும் கலைநிகழ்வுகளும் நாளை மறுதினம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கரணவாய் மேற்கு நொத்தாரிஸ் தோட்டத்தில் அமைந்துள்ள வேலவன் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

பொ.ஸ்ரீகாந்தராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும்சிரேஷ்டகணக்காய்வாளருமான ஆ.ந.இராசேந்திரன், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான சி.அகிலதாஸ், எஸ்.சிவயோகன், யா/கரணவாய் ம.வி. அதிபர் க. சண்முகநாதன், யா/இமையாணன் அ.த.க. பாட சாலை அதிபர் கு.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 80 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 400 | 600 | 400 | 400 |
| தக்காளி | 100 | 200 | 160 | 160 | 160 | 150- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 80 | 80 | 70 | 60 |
| கோவா | 150 | 200 | 200 | 200 | 150 | 140 |
| கரட் | 200 | 400 | 300 | 400 | 240-300 | 300 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 | 80 | 90 |
| புடோல் | 50 | 120 | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 | 60 | 60 |
| சின்னவெங்காயம் | 280 | 400 | 320 | 400 | 250 | 250 |
| பெரியவெங்காயம் | 90 | 120 | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 200 | 160 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 200 | 120 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | -- | 160 | 100 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 | 160 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 160 | 120 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 300 | 400 | 280 | 280 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 | 200 | 250 | 250 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 100 | 120 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 10 | 40 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 50 | 80 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | -- | 300 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 240 | 280 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 120 | 80 | 90 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 40 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | -- | 120 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவே பொதுபல சேனாவை பலமான அமைப்பாக உருவாக்கினார்



## ஞானசார தேரரை நாம் ஒளித்து வைக்கவில்லை- சம்பிக்க மறுப்பு

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை நாம் ஒளித்து வைக்கவில்லை. ஞானசார தேரரை பயன்படுத்தி ஜாதிக ஹெல உறுமயவை வீழ்த்த மகிந்த ராஜபக்ஷ முயற்சி செய்கிறார் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவே பொதுபல சேனாவை பலமான பௌத்த அமைப்பாக உருவாக்கினார். பொதுபல சேனாவினருக்கு நிதி உதவிகளையும் வாகனங்களையும் வழங்கி அவ்வமைப்பை பலப் படுத்தினார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

பொதுபல சேனா பௌத்த அமைப்பினர் ஆரம்பத்தில் எம்முடன் இணைந்து செயற்பட்ட போதிலும் கடந்த 2004 ஆம் ஆண்டு எம்மில் இருந்து தனித்து சென்று விட்டனர். அதில் இருந்து எமக்கும் பொதுபல சேனா அமைப்பினருக்கும் எந்த தொடர்புகளும் இருந்ததில்லை. ஒருசில விடயங்களில் நாம் பொதுப்படையாக கருத்துக்களை முன்வைத்த போது அதில் பொதுபல சேனா அமைப்பினரும் உள்ளடக்கப்பட்டனரே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் பொதுபல சேனாவை ஆதரித்து பேசவில்லை.

பொதுபல சேனா அமைப்பினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல அடியாட்களின் கீழ் செயற்பட்டனர். கடந்த 2005 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்பட்டனர். அதேபோல் 2010 ஆம் ஆண்டு சரத்பொன் சேகாவுடன் இணைந்து செயற்பட்டனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டனர். ஆகவே இவர் களின் நோக்கம் மாறுபட்ட ஒன்றாகும்.

நாம் பொதுபல சேனாவை ஆதரித்து செயற்படுவதாக ராஜபக்ஷக்கள் கூறுவது வேடிக்கையாக உள்ளது. அளுத்கம சம்பவத்தின் போதும் நுகேகொடை கூட்டத்தின்போதும் நாம் பொதுபல சேனாவை ஆதரித்து அமைச்சரவையில் பேசியதாக கூறும் இவர்கள் அதன் பின்னர் நடந்த உண்மைகளை கூற மறுக்கின்றனர். குறிப்பாக சிங்கள பௌத்த மக்களின் பலத்தில் செயற்பட்ட ஜாதிக ஹெல உறுமயவின் பலத்தை வீழ்த்த மகிந்த ராஜபக்ஷவும் கோத்தாபாய ராஜபக்ஷ பொதுபல சேனாவினருக்கு நிதி உதவிகளை வழங்கியும் வாகனங்களை வழங்கியும் அவ்வமைப்பை பலப்படுத்தியத்தை ஏன் வெளிப்படுத்தவில்லை.

கோத்தபாய ராஜபக்ஷவே பொதுபல சேனாவை பலமான பௌத்த அமைப்பாக உருவாக்கினார். இந்த நாட்டில் குழப்பங்கள் ஏற்படுத்த தைரியத்தை கொடுத்ததும் அவர்களேயாவர். ஆகவே இந்த உண்மைகளையும் ராஜபக்ஷவினர் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை தாம் ஒளித்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவையாகும். நாம் அவரை மறைத்து வைக்கவில்லை. அதற்கான அவசியமும் எனக்கு இல்லை. அவர் அவசியமான நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராவார் என அவ்வமைப்பினர் தெரிவித்துள்ளனர். ஆகவே எம்மை இந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி பேச வேண்டிய அவசியம் இல்லை. எனினும் ஊடகங்கள் ஊடாக எந்த வகை யிலாவது ஞானசார தேரரை பயன்படுத்தி ஜாதிக ஹெல உறுமயவை வீழ்த்த மகிந்த ராஜபக்ஷ முயற்சி செய்கிறார்.

இன்று நாட்டில் ஜனநாயகத்தை சீரழிக்க ஒரு சிறிய பிரிவு முயற்சி செய்து வருகின்றது. இந்த குழு சர்வதேச பயங்கரவாதிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. இந்த நாட்டில் ஜனநாயகத்தை சீரழிக்க இந்த குழுவினர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நகர்வுகளை சாதாரண விடயமாக கருத்தில் கொள்ளக்கூடாது. இது மிகவும் மோசமான நடவடிக்கைகள் என்பதைநினைவில்வைத்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 170Cm<br>தகைமை/தொழில்:அரச தொழில் நோர்வே<br>தொ.இ: B/7466 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா :செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமைதொழில்:வைத்தியர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/6532 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:22 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7468 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா :சூரி செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு : சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/6534 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lஅரசதொழில்<br>தொ.இ: B/7470 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:9 செவ் 7ல்<br>உயரம் :5'3"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/6535 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா : செவ் 7இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7471 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 2 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6538 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# அமைச்சர் சம்பிக்கவின் திட்டத்தையே பொதுபலசேனா அமுல்படுத்துகிறது

## வாசு எம்.பி குற்றச்சாட்டு





(கொழும்பு)

முஸ்லிம்களின் கடைகளுக்கு தீ வைத்தல் மற்றும் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றினூடாக நாட்டில் இனப் பிரச்சினையை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் திட்டமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலுள்ள முக்கிய அமைச்சரான சம்பிக்க ரணவக்கவின் ஒப்பந்தத்தையே பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மேற்கொண்டு வருகின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சோசலிஷ மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)




இணுவில், அண்ணா சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் மாதர் சிக்கன கடனுதவிச் சங்கத்தின் அங்கத்தவர்களின் கௌரவிப்பு மற்றும் சிறப்பாகச் செயற்பட்ட அங்கத்தவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நிலையத் தலைவர் ஜெசிந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ் கலந்துகொண்டார். இந் நிகழ்வில் மாதர்சங்கத்தில் சிறப்பாகச் செயற்பட்ட நிர்வாகிகள் பரிசுகள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர். மாகாணசபை உறுப்பினர் மற்றும் முன்னாள் பிரதேசசபை தவிசாளருடன், சங்க உறுப்பினர்கள், பெண்கள், இளைஞர்கள், ஊரவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கம்பம் வழங்கல்



(மந்துவில்)

சாவகச்சேரி மீசாலை சோலை அம்மன் ஆலயத்திற்கு ஸ்ரீதரன் வசந்த ரோகினி தனது தந்தையின் நினைவாக 7 இலட்சம் ரூபா செலவில் மின்கம்பங்களை அன்பளிப்பாக வழங்கினார். (இ-5-101)

# ஆயுதமுனையில் அச்சுறுத்தி திருட்டில் ஈடுபட்ட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைது

## 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மீட்பு





கோப்பாய் இருபாலை பகுதியில் பொதுமக்களை ஆயுத முனையில் விரட்டி திருட்டில் ஈடுபட்ட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் இருபாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 15ஆம் திகதி குடும்பத்தினரை அச்சுறுத்தி ஆயுத முனையில் வைத்து 10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் ஒரு இலட் சம் ரூபா பணம்என்பன திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த சம்பவம் இடம்பெற்ற வீட்டின் அருகில் இருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவான காட்சிகளை சான்றாக வைத்து நேற்றைய தினம் அரியாலையை சேர்ந்த இரு இளைஞர்களைக் கைது செய்தனர். அத்துடன் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலம் திருட்டுக்கு உடந்தையாக இருந்த வேறு இரு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. இரு மோட்டார் சைக்கிள்கள் 1 இலட்சம் ரூபா பணம், தங்க நகைகளை உருக்கிய 5 பவுண் தங்கக் கட்டி, கைத்தொலைபேசி 2 மற்றும் வங்கி அட்டைகள், அழகுசாதனப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்களை கைது செய்வதற்கு 8 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் அதிரடியாக செயற்பட்டார்கள் என்பதுடன் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (இ-9)

# திருடர்களால் மக்கள் அச்சம்

(கோப்பாய்)

கோப்பாய் டச்சு வீதி, கல்வியங்காடு கிழக்கு, இருபாலை போன்ற இடங்களில் இரவு வேளைகளில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் மக்களிடத்தில் பதற்ற நிலையும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

கடந்தவாரம் டச்சு வீதியில் வங்கி ஊழியரின் வீட்டில் நள்ளிரவில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கோண்டாவில் வீதியிலுள்ள அன்னை திரேசா இல்லத்திற்கு அண்மையிலுள்ள ஆசிரியர்கள் தங்கியிருந்த வீட்டில் திருடர்களின் திருட்டு முயற்சி அயலவர்களால் முறியடிக்கப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதனால் இரவு வேளைகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையினை மேற்கொண்டு திருடர்களை அடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-108)

# சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினம் ஜூன் - 26

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கடந்த 1972ஆம் ஆண்டு தொடக்கம் புகைப்பொருள், போதைப்பொருள் பாவனைக்கு எதிராக குடாநாட்டில் செயற்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டிற்காக குறித்த சம்மேளனத்திற்கு ஜனாதிபதி கடந்த வருடம் யாழில் வைத்து பாராட்டுப் பத்திரம் வழங்கி வைத்தார். இந் நாட்டிலிருந்து மதுவை ஒழிக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புத் தினமான ஜூன்26 யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் (வைத்தியசாலை வீதி பதாகைகள் மூலம் எதிர்ப்பை காட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ் எதிர்ப்பு செயற்பாடு எவருக்கும் எதிராக நடத்தப்படமாட்டாது. இச் செயற்பாடுகள் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற பின் முனியப்பர் வீதியில் சென்று யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

# வித்தியாலய ஸ்தாபகர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

யாழ். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய ஸ்தாபகர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும். அதிபர் ம. மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், கௌரவ விருந்தினராக சிந்மய பாரதி வித்தியாலய முன்னாள் உப அதிபர் தி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# கடன் அட்டைக்கான வட்டி வீதம் அதிகரிப்பு

கடன் அட்டைக்காக அறவிடப்படுகின்ற வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கு வணிக வங்கிகளினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரையில் கடன் அட்டைக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவை கட்டணத்திற்கான வருடாந்த வட்டி நூற்றுக்கு 24 வீதமாக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டி அதிகரிப்பு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து 28 வீதத்தில் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த திருத்தப்பட்ட வட்டி வீதம், 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியின் பின்னர் அனைத்து கொடுக்கல் வாங்கல்களின் போது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக குறித்த வங்கிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை 2017 ஏப்ரல் மாதம் இறுதியில் இலங்கையில் இயங்கும் கடன் அட்டைகளின் எண்ணிக்கை 1,354,971 என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவற்றில் 28,621 கடன் அட்டைகள் உள்ளூர் ரீதியில் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றவை எனவும், ஏனைய 1,326,350 கடன் அட்டைகள் சர்வதேச கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றவைகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் மாதாந்த கட்டண விபர அறிக்கையுடன் அதிகரிக்கப்பட்ட வட்டி வீதம் தொடர்பான தகவலும் பரிமாற்றம் செய்யப்படவுள்ளது. (இ-3)

# உயர்தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை

க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கணித, உயிரியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு தமிழ் பேசும் மாணவர்களுக்காக மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் வருடாந்த முன்னோடிப் பரீட்சையானது எதிர்வரும் ஜூன் 25 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 05 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் 5.30 மணி வரை இணைந்த கணிதம் பகுதிI உம் பிற்பகல் 2.30தொடக்கம் 4.30 மணிவரை உயிரியல் பகுதிI, பொறியியல் தொழில்நுட்பம் பகுதிI உம், உயிரியல் முறைமை தொழில்நுட்பம் பகுதிI உம் பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் 5.30 மணிவரை இணைந்த கணிதம்பகுதிII உம், உயிரியல் பகுதி IIஉம்பொறியியல்தொழில்நுட்பம் பகுதிIIஉம் உயிர் முறைமை தொழில்நுட்பம் பகுதி II உம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் 4.30 மணி வரை பௌதீகவியல் பகுதி Iஉம் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் பகுதி Iஉம் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் 5.30 மணிவரை பௌதீகவியல் பகுதிIIஉம் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் பகுதிIIஉம் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிதொடக்கம் 4.30 மணிவரை இரசாயனவியல் பகுதிI உம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பகுதிI உம் விவசாயம் பகுதிI உம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் 2.30 தொடக்கம் 5.30 மணிவரை இரசாயனவியல் பகுதிIIஉம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பகுதி IIஉம் விவசாயம் பகுதி IIஉம் ஆகிய பரீட்சைகள் நடை பெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் நடைபெறவுள்ள பாடசாலைகள் தொடர்பான மேலதிக விபரங்களை info@moraetamils.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் அல்லது www.moraetamils.com என்ற இணையத்தள முகவரிஊடாகவும் பார்வையிட முடியும். (5-9)

# பாகிஸ்தானில் மகிந்த அணி



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு பயணமானார். இலங்கை விமானசேவைக்கு சொந்தமான UL183 என்ற விமானத்தின் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணியளவில் கராச்சி நோக்கி அவர் பயணமானார். இவருடன் டளஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச மற்றும் ஜி.எல்.பீரிஸ் உள்ளடங்கலாக 8 பேர் பயணித்துள்ளனர். (இ-3)

# புதிய அரசியலமைப்பால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது

## சுதந்திரக் கட்சி வலியுறுத்து

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படும் போது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட இடமளிக்கப்பட முடியாது என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாடு எந்த அடிப்படையிலும் மாற்றம் செய்யப்படக்கூடாது என்ற சரத்தினை புதிய அரசியல் அமைப்பில் உள்ளடக்க வேண்டும் என கட்சி தீர்மானித்துள்ளது என அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்.

கடந்த 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கான முன்னுரிமை நாட்டில் மத வழிபாட்டு சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களில் எவ்வித மாற்றமும் இருக்கக் கூடாது என்பதே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஐக்கியம் பௌதீக ஒருமைப்பாடு மற்றும் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய எந்தவொரு சரத்தும் புதிய அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்படக்கூடாது என்ற திடமான நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி வகித்து வருகின்றது.

மேலும், அனைத்து இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளைக் களைய சர்வமதத்தலைவர்களின் பிரநிதித்துவத்துடன் நல்லிணக்கக் குழுக்கள்

## 25 மாவட்டங்களிலும் அமைக்க நல்லிணக்க அமைச்சு நடவடிக்கை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சர் என்ற வகையில் முன்வைத்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக சர்வமதத் தலைவர்களின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய மாவட்ட மட்டத்திலான நல்லிணக்கக்குழு நாடு தழுவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலான நல்லிணக்கக் குழு மாவட்ட செயலாளரின் அழைப்பின் அடிப்படையில் சர்வமத தலைவர்களின் பிரதிநிதித்துவத்துடன், பொலிஸ் அத்தியட்சகர், ஓய்வுபெற்ற நீதிபதிகள், பாடசாலை அதிபர்கள் உள்ளடங்கலாக ஏனைய அலுவலர்களையும் அவதானிப்பாளர்களாக உள்வாங்கி நியமிப்பதுடன் இக்குழுவானது மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் பதற்றங்களையும் தணிப்பதுடன் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் மாவட்ட மட்டத்தில் ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளையும் முன்னெடுக்கும் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு வந்த போதிலும் சில இடங்களில் மத அடிப்படைவாதம், இனவாதம், இனமுரண்பாடுளைத் தூண்டக் கூடியவாறான ஒருசில சம்பவங்கள் மாவட்டமட்டத்திலும் பிரதேச ரீதியாகவும் இடம்பெற்றது. மதத்தலங்கள் சில இடங்களில் தாக்கப்பட்டமையே பதற்றங்களுக்கு காரணமாக அமைந்தது.

மோதல்களை புரிந்துணர்வு மூலம் தீர்த்துவைப்பதற்கு சர்வமதத் தலைவர்களின் பிரதிநிதித்துவத்துடன் மாவட்ட மட்டத்தில் நல்லிணக்க குழுக்களை தாபிப்பது மிக முக்கியமாகும். இந்த அடிப்படையில் மாவட்டமட்டத்தில் சர்வமத தலைவர்களின் பிரதிநிதித்துவத்துடன் ஸ்தாபிக்கப்படவுள்ள சர்வமதகுழு, பிரதேசத்தில் மதங்களிடையே மற்றும் இனங்களிடையேயான மோதல்களுக்கான காரணங்கள் மற்றும் அதன் பின்னணியை ஆராய்தலும், அவற்றில் தலையீடு செய்வதற்குத் தகுந்த மூலோபாயங்கள் மற்றும் அணுகுமுறைகளை கையாளல், மதத்தலங்களுக்கு தொடுக்கப்படும் தாக்குதல்கள் காரணமாக ஏற்படுகின்ற பதற்ற நிலையை ஆராய்ந்து, அதனை தீர்த்து வைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல், அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு மோதலைத் தீர்த்து வைக்கும் அணுகுமுறைகளூடாக இது குறித்து தலையீடு செய்யும்படி அழைத்தல், பதற்றங்கள் மற்றும் நிகழ்வுகளை மிக்க சமநிலைக் கண்ணோட்டத்துடன் மீளாய்வு செய்தல், அவை தொடர்பான தரவுகளை சேகரித்தல், வெறுப்புணர்வைத் தூண்டக்கூடிய பேச்சுக்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுத்தல் என்பன மாவட்ட நல்லிணக்க குழுக்களின் முக்கிய பொறுப்பாகும் என செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இக்குழு 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டுமெனவும் தேவைப்படுமிடத்து உடனடியாக கூட்டப்பட வேண்டுமெனவும் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்படுமிடத்து அது தொடர்பான அறிக்கை நல்லிணக்க அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தேசியமட்டத்திலான நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளுக்கும் தீர்மானங்களுக்கும் முன்வைக்கப்படவேண்டுமெனவும் அமைச்சரவை தீர்மானித்தது.

நல்லிணக்கம் தொடர்பான நிறுவன பொறிமுறை, இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்ற ஒரு பொறிமுறையை கையாள்வதனால் நீதித்துறை, சட்டத்துறை தொடர்பான அணுகுமுறைக்கு எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்த கூடாதுஎனவும் அமைச்சரவை பத்திரத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. இது நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையாக நோக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)



சர்வதேச யோகா தினத்தையிட்டு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நேற்றுக்காலை கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் யோகாப் பயிற்சி நடைபெற்றது.

# பாடசாலையில் திருட்டு



பாடசாலை ஒன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சமையல் பொருட்களையும் இலத்திரனியல் பொருட்களையும் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19.06.2017) இரவு கட்டைவேலி அ.மி.த.க.பாடசாலையின் முன்பக்க கதவினை உடைத்து களஞ்சிய அறைக்குள் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 37 1/2 கிலோகிராம் அரிசி, 39 மீன்ரின், 7லீற்றர் எண்ணெய், கணனி, பல்லூடகம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். இதுதொடர்பில் நேற்று காலை பாடசாலை அதிபரினால் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

# கிழக்கு சபையிலும் நிதி, ஊழல் மோசடி

## யோகேஸ்வரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடமாகாண சபையில் மாத்திரமன்றி கிழக்கு மாகாண சபையிலும் நிதி மற்றும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வந்தாறுமூலை மாருதி பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் பல நிதி மோசடிகள் நடைபெற்றுள்ளன. அவை இது வரையில் வெளிக்கொண்டு



வரப்படவில்லை. விசாரணைகள் நடத்தப்படவில்லை.

முதலமைச்சர் மாநாடு நடத்தியதில் நிதி, ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. குறித்த நிகழ்வுக்குரிய நிதி, மோசடி தொடர்பான விசாரணைகள் தொடங்கப்பட்டு அதற்கான நீதியான விசாரணைகள் இடம்பெறவில்லை.

கிழக்கு மாகாண சபையில் முன்னைய ஆட்சிக் காலத்தில் பல தவறுகள் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ள நிலையில் அவை மூடி மறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தற்போது வடமாகாண சபையை தூக்கிப்பிடித்துக் கொண்டு கிழக்கில் நிதி, ஊழல் மோசடிகள் இடம்பெறவில்லை என நாங்கள் பிரசாரம் செய்ய முற்படவில்லை.

தற்போது வடக்கில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலை நீங்கி நல்லதொரு ஆரோக்கியமான செயற்பாட்டிற்காக வழமைபோல் நிர்வாக கட்டமைப்பு முன்வரவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

அங்கு நியாயம் நீதி நிலைக்கவேண்டும். அந்த ஒற்றுமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-3)

# கொள்ளுப்பிட்டி கடற்கரையில் இளம்பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட யுவதியின் சடலம் இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சடலம் வென்னப்புவ சால்ஸ் விலியம் மாவத்தையில் வசித்த 25 வயதான யுவதி என இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த யுவதி கடந்த 15 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த நிலையில் அவரது சடலம் கொள்ளுப்பிட்டி கடலில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை பிரத்தியேக வகுப்புக்காக கொழும்புக்குச் செல்வதாகத் தெரிவித்து வீட்டிலிருந்து சென்ற தமது மகள் மாலையாகியும் வீடு திரும்பாதமையால் அவரது பெற்றோர் உடனடியாக வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டின் பின்னர் இத்தகவல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தேடலில் கொள்ளுப்பிட்டி கடற்கரையில் குறித்த யுவதியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

தமதுமகளுக்கு தற்கொலை செய்து கொள்ளுமளவு காரணங்கள் எதுவும் இருந்திருக்கவில்லை என்றும் இந்த மரணத்துக்கான காரணத்தை புரிந்து கொள்ள முடியாதுள்ளதாக பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் வென்னப்புவ மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்

– கோன்பு தஸன்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www:valampurii:lk

# நீதியோடும் தர்மத்தோடும் அரசியல் பணியாற்றுங்கள்

வடக்கு மாகாண அரசில் நடந்த குழப்பங்கள் தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக மக்கள் குழப்பமடைந்தனர்.

அதன் வெளிப்பாடுகள் பல கோணங்களில் சீறிப்பாய்ந்ததை பார்த்தோம். ஒரு கால மணித்தியால இடைவெளிகளில் வட மாகாணம் முழுமையும் கடையடைப்பு நடைபெற்றது. முதலமைச்சருக்கு ஆதரவாகப் பேரணிகள் நடைபெற்றன.

இவற்றைக் கூறுவது முதலமைச்சருக்காக அல்ல. மாறாக தமிழ் மக்கள் முதலமைச்சர் மீது கொண்டுள்ள நம்பிக்கையைத் தெரியப்படுத்துவதற்காக.

அரச பணியாளர்கள், அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள் அனைவரும் மக்களுக்காகவே பணி செய்கின்றனர்.

அதனால்தான் பக்தி மொழியாகிய நம் தமிழ் மொழி மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கூறிக் கொண்டது. மக்கள் பணி என்பது இறைவனுக்கானது.

ஆகையால் பொதுப்பணி, சமூகப் பணி, சமயப் பணி செய்கின்ற அத்தனை பேரும் மக்களுக்காகப் பணி செய்கின்றனர்.

எனவே மக்கள் எங்கு நிற்கிறார்களோ! அவர்கள் யாரை ஆதரிக்கிறார்களோ! அதில் நியாயம் இருக்கும் – நீதி இருக்கும்.

ஊர் ஓடினால் ஒத்து ஓடு. ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டல்லவா?

அதன் பொருள் மக்கள் எங்கு ஒன்றாக ஒருமித்து நிற்கிறார்களோ அவர்களோடு சேர்ந்து நிற்பதுதான் ஏற்புடையதும் நியாயமானதாகும்.

உண்மையில் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி ஒருபோதும் கொண்டு வந்திருக்கக்கூடாது.

மாகாண சபையின் இளம் உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருக என வேகப்படுத்தினால், அதனை இரா. சம்பந்தர், மாவை சேனாதிராசா போன்ற மூத்த – பழுத்த அரசியல்வாதிகள் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். அவர்களுக்கு அரசியல் பற்றி போதனை செய்ய வேண்டும்.

இதைவிடுத்து வீடு எரிக்கிற ராசாவுக்கு நெருப்பு கொடுக்கும் மந்திரியாக இருந்தால் நிலைமை மோசமாகுமேயன்றி சீராகாது.

தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிடம் கையளித்ததை எதிர்த்து மக்கள் ஒன்றுகூடி பேரணி நடத்துகின்றனர், கடையடைப்பு முழுமையாக நடக்கின்றது.

அகத்திலும் புலத்திலும் இருந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெறுங்கள் என்ற அழுத்தம் தமிழரசுக் கட்சியை உலுப்புகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழரசுக் கட்சியில் ஆழ்ந்தறிந்த அரசியல்வாதி இருந்திருந்தால் எமது மக்களின் கோரிக்கையை மதிக்கின்றோம். எங்கள் அரசியல் பணி மக்களுக்கானது. எனவே நீங்கள் விரும்பினால் உங்கள் தமிழரசுக் கட்சி அதனை நிறைவேற்றும்.

நீங்கள் நடத்திய பேரணிக்கும் கடையடைப்புக்கும் நாங்கள் தலைசாய்த்து மதிப்பளிக்கிறோம். முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மீளப்பெறுகிறோம்.

நடந்த கசப்பான நிகழ்வுக்காக மனம் வருந்துகிறோம். தொடர்ந்தும் எங்கள் அரசியல் பணி மக்கள் பணியாக முன்னெடுக்கப்படும் என்று கூறியிருந்தால் தமிழரசுக் கட்சியின் பெருமையும் புகழும் வானுயர்ந்திருக்கும்.

என்ன செய்வது பெருந்தன்மை இப்போது குறைந்து விட்டது. பரவாயில்லை மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரின் முயற்சி ஒரு சுமுகமான சூழலைத் தந்தது.

இதனை தமிழ் மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவோம். சதா அழுது கொண்டிருக்கும் எங்கள் மக்களின் எங்கள் உறவுகளின் வாழ்வுக்காக நீதியோடும் தர்மத்தோடும் அரசியல் பணி செய்வோம் என்று உறுதி கொள்வோம்.

# பழைய கள்வர்களை விரட்டி விட்டு புதிய கொள்ளையர்கள் ஆட்சியில்!

## அரசை சாடுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

பழைய கள்வர்களை விரட்டிவிட்டு புதிய கொள்ளையர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். முன்னைய ஆட்சியில் மக்களின் பணத்தை கொள்ளையடித்து சுகபோக வாழ்க்கையை வாழ்ந்தனர். இப்போதும் அதையே மேற்கொண்டு வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்கூறுகையில்,

தேசிய ஒற்றுமையை வளர்ப்பதாக கூறிக்கொண்டு இனவாதத்தை பரப்பிநாட்டை சீரழிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இப்போது பரப்பப்படும் இனவாதத்தின் எல்லை மிகப்பெரிய இன அழிவில் முடியும்.

பழைய கள்வர்களை விரட்டிவிட்டு புதிய கொள்ளையர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். இரு கள்வர் கூட்டணியும் இணைந்தே நாட்டை கொள்ளையடித்து வருகின்றது.

நாட்டில் இனவாதம் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. நாம் இனவாதத்தில் இழந்தவை அதிகமாகும்.

இந்த அனுபவங்கள் எமக்கு நன்றாகவே உள்ளது. இப்போது மீண்டும் அதே பாதையில் நாடு செயற்பட்டு வருகின்றது. முன்னைய அரசாங்கம் இனவாதிகளின் பின்னணியில் இருந்தது.

சில சேனாக்கள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. தற்போது இந்த அரசாங்கமும் இனவாதிகளை தண்டிக்காது அமைதி காக்கின்றது.

அரசாங்கம் சூழலை பாதுகாப்பதை விடுத்து சூழலை மேலும் மாசுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதேபோல் சர்வதேச நாடுகளுக்கு நிலங்களை விற்று பிரச்சினைகளை மேலும் மோசமாக்கி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# நகை, பணம் திருட்டு

பட்டப்பகல் வேளையில் வீட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகை, பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கரவெட்டி தச்சன் தோப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வீட்டிலிருந்தவர்கள் வெளி யில் சென்றதனைச் சாதகமாகப் பயன்படுத்தி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு தொகைப் பணத்தையும் இரண்டு தங்கச் சங்கிலியையும் திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளர் நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளார். (செ-60)

# வீட்டினுள் புகுந்து திருட்டு

## சங்கிலி, தொலைபேசிகள் அபேஸ்

(கரணவாய்)

தனிமையில் இருந்த மூதாட்டியின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அவரின் கழுத்தை நெரித்து வாய்க்குள் துணியை செலுத்திவிட்டு அரைப்பவுண் தங்கச் சங்கிலியையும் இரண்டு தொலைபேசியையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

புலோலி வடக்கு தட்டா தெருப் பகுதியில் உள்ள மூதாட்டியின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு புகுந்த திருடர்கள்,

அவரின் குரல்வளையினை நெரித்து வாய்க்குள் துணியினை செலுத்தி விட்டு கழுத்தில் இருந்த சங்கிலியையும் வீட்டில் இருந்த இரண்டு தொலைபேசியையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் நேற்று பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. (செ-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வியாழக்கிழமை காலை9மணியிலிருந்துமாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் மலையா பருத்திகுளம் பிரதேசம் ஆகிய பிரதேசத்திலும் மின்தடைப்படும்(இ-9)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## சொன்னதைக் காப்பாற்று



✦ மனம் என்னும் பாத்திரத்தை பிரார்த்தனை மூலம் துலக்கினால் தூய்மையுடன் இருக்கும்.

✦ கடவுளின் திருநாமத்தை தினமும் ஓதினால், பாவம் அனைத்தும் ஓடி விடும்.

✦ ஒரு மனிதனின் மனநிலைக்கு ஏற்பவே அவனுடைய வாழ்வியல் சூழ்நிலையும் அமைகிறது.

✦ சொன்ன வார்த்தையை மனிதன் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் நம்பகத்தன்மை அற்றவனாகி விடுவான்.

✦ கடவுள் ஒருவரே நம்முடைய ஒரே பலம். அவரின்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்க சித்தர் சுவாமிகள் நேற்று சிவபதமடைவு



சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தின் தர்மகர்த்தா நரசிங்க சித்தர் சுவாமிகள் நேற்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

வரலாற்றுக்கால ஈச்சரமாகிய சம்புநாதஈச்சரத்தை மீண்டும் சைவத்தமிழ் மக்களின் வழிபாட்டுக்குரிய தலமாக மாற்றியவர் நரசிங்க சித்தர் சுவாமிகள் ஆவார்.

சுவாமிகள் தற்போது வரை சிவபெருமானின் 21 அடி உயரமான தியான திருச்சொரூபத்துடன் திகழும் சம்புநாதஈச்சரத்தில். பல தசாப்தங்கள் தர்மகர்த்தாவாக இருந்து பக்தர்களை ஆற்றுப்படுத்தி வந்தவராவார்.

சுவாமிகளின் திருவுடலுக்கு இன்று காலை 9.00 மணி தொடக்கம் யாகக் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு சம்புநாதஈச்சர ஆலய வளாகத்தில் சமாதி வைக்கப்படும் என மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினரும் சிவ தொண்டர்களும் அறிவித்துள்ளனர். (செ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### அண்ணியை திருமணம் செய்யலாமா?

அண்ணன் இறந்துவிட அண்ணன் மனைவியைக் கொழுந்தன் திருமணம் செய்து கொள்வது சாஸ்திர தர்மம் ஆகாது. இது பெரும் குல கலப்பு ஆகும். பாவத்தைக் கொடுக்கும். அண்ணி இளம் வயது பெண்ணாக இருப்பின் வேறு ஒருவருக்கு முன்னின்று திருமணம் செய்து கொடுக்கலாம். (தொடரும்)




பிரம்மன் யோசித்தான் பின் கை லாயம் சென்றான் கைலாயநாதனைக் கண்டு நடந்ததை நவின்றான்.

நாராயணன் உணவின்றி நலிந்திருக் கிறார். நாமிருவரும் பசுவாகவும், கன்றாகவும் சென்று நாராயணனுக்கு உணவு அளிப்போம் என்றாம் என்றான் பரமேஸ் வரன் ஒப்புக் கொண்டான்.

இருவரும் புறப்பட்டு இம்மை உலகை அடைந்தனர். கொல்லாபுரத்தில் கொடுந் தவத்தில் ஆழ்ந்திருந்த திருமகளை அணு கினார்.

அம்மையே... உன் கோபத்தால் உன தருமைக் கொற்றவனுக்கு நேர்ந்த கதி தெரியுமா உனக்கு? நீபாட்டிற்கு எக்கேடும் கெட்டுப்போ என உன் கணவனைக் கைவிட்டு வந்து விட்டாய் மாதவனோ மங்கை நீ சென்ற இடம் தெரியாமல் புவியெங்கும் தேடிச் சோர்ந்தான்.(தொடரும்)

# கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற

# கிரிக்கெட் போட்டி முடிவுகள்

கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி கழகங்கள் மோதும் கிரிக்கெட் சமர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி விளை யாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமானது.

முதலாவது போட்டியில் மட்டுவில் கதிரொளி விளையாட்டுக் கழகமும் கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டுவில் கதிரொளி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அவ் அணி 8 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை பெற்றது.

இதில் வினோயன் 17 ஓட்டங்களை பெற்றதோடு ஸ்ரார் சார்பாக அனோத் 3 இலக்குகளையும் கோகுல்ராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கைதடி ஸ்ரார் 5.2 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியை தனதாக்கியது.

இதில் கவநீதன் 15 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்தார். கதிரொளி சார்பாக சுயந்தன் 2 இலக்குகளை சரித்தார்.

இரண்டாவது போட்டியில் நியு பவர் B அணியும் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியு பவர் 7.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை பெற்றது.

இதில் கிருஷ்ணா 13 ஓட்டங்களை பெற்றதோடு துர்க்கா சார்பாக மதுசன் 4 இலக்குகளையும் விஜி 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கைதடி துர்க்கா 6.1 பந்து பரிமாற்றங்களில் ஒரு இலக்கினை இழந்து வெற்றியை தனதாக்கியது. இதில் சர்வா 20 ஓட்டங்களையும் சாருயன் 11 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். நியு பவர் சார்பாக இளங்கோ 1 இலக்கினை சரித்தார்.

மூன்றாவது போட்டியில் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழகமும் மட்டுவில் வில்சன் விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டுவில் வில்சன் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அன்னை விளையாட்டுக்கழகம் 8 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

இதில் லது 66 ஓட்டங்களையும் மது 21 ஓட்டங்களையும் பெற்றதோடு வில்சன் சார்பாக சுஜீவன், விது, கலக்ஷன் தலா ஒரு இலக்குகளை வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வில்சன் விளையாட்டுக்கழகம் 6.5 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் அன்னை விளையாட்டுக் கழகம் வெற்றியை தனதாக்கியது.

இதில் ஜெயக்குமார் 18 ஓட்டங்களையும் ஜெயபிரகாஷ் 13 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். அன்னை சார்பாக லது 5 இலக்குகளையும் வினோ 2 இலக்குகளையும் சரித்தனர்.

நான்காவது போட்டியில் மகா விஷ்ணு விளையாட்டுக் கழகமும் குமரநகர் விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மகா விஷ்ணு துடுப்பாட்டத்தை தேர்வு செய்து 7.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை பெற்றது. இதில் கஜீவன் 25 ஓட்டங்களையும் கிருபா 13 ஓட்டங்களையும் பெற்றதோடு குமரநகர் சார்பாக றமணன் 3 இலக்குகளையும் லோஜீ 3 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குமரநகர் 7.4 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியை தனதாக்கியது. இதில் பிரியரூபன் 30 ஓட்டங்களையும் தர்சாந்த் 17 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். மகா விஷ்ணு சார்பாக தனுராஜா 2 இலக்குகளை சரித்தார்.

ஐந்தாவது போட்டியில் நவசக்தி விளையாட்டுக் கழகமும் பிக்பூட் விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நவசக்தி துடுப்பாட்டத்தை தேர்வு செய்து 6.2 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களை பெற்றது.

இதில் டெனிஸ் 11 ஓட்டங்களை பெற்றதோடு பிக்பூட் சார்பாக மது 4 இலக்குகளையும் சுயன் 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிக்பூட் அணி 6.5 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றியை தனதாக்கியது. நவசக்தி சார்பாக டெனிஸ் 2 இலக்குகளை சரித்தார்.

ஆறாவது போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகமும் நாவற்குழி றோயல் விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற றோயல் களத்தடுப்பை தேர்வு செய்தது அதன்படி கைதடி வளரமதி துடுப்பெடுத்தாடி 8 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களை பெற்றது. இதில் லவி 19 ஓட்டங்களையும் அயு 13 ஓட்டங்களையும் பெற்றதோடு றோயல் சார்பாக பிரண் 3 இலக்குகளையும் நிதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் 7.2 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றியை தனதாக்கியது. இதில் மதுசன் 17 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தார். வளர்மதி சார்பாக அஜியந்தன் 3 இலக்குகளை சரித்தார்.

ஏழாவது போட்டியில் சுப்பர் யுனிபைட் விளையாட்டுக் கழகமும் மறவன்புலவு அம்பிகை விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அம்பிகைகளத்தடுப்பை தேர்வு செய்தது. இதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் யுனிபைட் 8 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 65 ஓட்டங்களை பெற்றது.

அணி சார்பாக இதில் லவகீதன் 13 ஓட்டங்களையும் அனோயன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். அம்பிகை சார்பாக பகீரதன் மற்றும் ரூபன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அம்பிகை 7.3 பந்து பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றியை தனதாக்கியது. இதில் கேசவன் 22 ஓட்டங்களையும் சிவரூபன் 18 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். சுப்பர் யுனிபைட் சார்பாக கயன் மற்றும் சோபன் தலா 2 இலக்குகளையும் சுஜீபன் 3 இலக்குகளையும் சரித்தனர்.

இப்போட்டிகளுக்கு சி.சி[illegible]ன், நா. நதீசன், பா. சோபின் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினார்கள். தொடர்ச்சியான போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். (க)

## ஆனந்தா வி.கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது சென்.யூட்ஸ் அணி



உடுப்புக்குளம் அலையோசை நடத்திய உதைபந்தாட்ட இறுதி சுற்றுப்போட்டியில் சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனந்தா விளையாட்டுக்ழகங்கள் மோதியது. இப்போட்டியில் 4:0 என்ற கோல் கணக்கில் சென். யூட்ஸ் அணி வெற்றி வாகை சூடியது அவ் அணி சார்பாக பகிதரன் 3ஸ்ரலின் ஒரு கோல் போட்டார்.இப்போட்டியில் ஆட்டநாயகன் பகிதரன் தெரிவானார். தொடர் ஆட்ட நாயகன் கமல் அதிக கோல் அடித்தவர் .கமல்(9) பகிதரன் (9) சிறந்த காப்பாளர் .ஆனந்தா அணி காப்பாளரும் சிறந்த அணியாக அண்ணா கழகமும் தெரிவாகியது. (க)

# கட்டியப்பா ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுத் தொடர்

## பிளே ஓப் சுற்றில் சைனிங்ஸ்



சிறப்பான பந்துவீச்சு,சிறப்பான துடுப்பாட்டம் நேதாஜி அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டு B பிரிவில் முதலாம் இடத்தை பெற்று Play off சுற்றுக்கு முன்னேறியது சைனிங்ஸ் அணி .

மறைந்த நேதாஜி உறுப்பினர் கட்டியப்பா ஞாபகார்த்தமாக நேதாஜி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 நபர்கள் 10 பந்துப் பரிமாற்றங்களை கிரிக்கெட் தொடரில் பிரிவு B சைனிங்ஸ் அணி முதல் போட்டியில் இளங்கதிர் அணியுடன் மோதியது.

முதலில் ஆடிய சைனிங்ஸ் அணி 80 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது.சைனிங்ஸ் சார்பாக பார்த்தீபன் (சிம்பு) 31, ரவி 18, துளசிராம் 17 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இளங்கதிர் அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 80 ஓட்டங்களை பெற போட்டி சமனிலையானது.

சைனிங்ஸ் அணி சார்பாக அசத்தலாக பந்து வீசிய பிரசாந் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சுப்பர் ஓவரில் முதலில் ஆடிய இளங்கதிர் அணி 11 ஓட்டங்களை பெற்றது.

வெற்றியிலக்கை நோக்கி ஆடிய சைனிங்ஸ் அணி 10 ஓட்டங்களை பெற்று துரதிர்ஷ்டவசமாக தோல்வியினை தழுவியது.

2ஆவது போட்டியில் சைனிங்ஸ் அணி, நேதாஜி அணிகள் மோதின.

முதலில் ஆடிய நேதாஜி அணி 48 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்தது. சைனிங்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் அன்பழகன் 2, பிரசாந் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சைனிங்ஸ் அணி 5.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

சைனிங்ஸ் அணி சார்பாக ரவி 17, பார்த்தீபன் (சிம்பு ) 14 ஓட்டங்களை பெற்றனர்.

நடைபெற்ற மூன்றாவது போட்டியில் நேதாஜி 78 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் 41 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

B பிரிவில் முதலாம் இடத்தை சைனிங்ஸ் அணியும் 2ம் இடத்தை நேதாஜி அணியும் பிடித்து Play off சுற்றுக்கு முன்னேறியுள்ளன. (க)

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சிறி காமாட்சியை வீழ்த்தியது திருநெல்வேலி சி.சி. அணி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் 34 ஆவது போட்டியில் திருநெல்வேலி சி.சி.அணி சிறிகாமாட்சி அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று தனது 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 36.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 186 ஓட்டங்களை பெற்றது.

நிருஜன் - 80, சுதர்ஸன் - 38, யாதவன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களை பெற்றனர். செந்தூரன் - 01, பிரபுவன் - 01, றொகான் - 05, சிவராஜ் - 03 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி அணி 25.1 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றனர். அசோக் - 46, தர்சிகன் - 50, லவன் ஆட்டமிழக்காது 36, சைலேஸ்வரன் - 18 ஓட்டங்களையும் பெற்றனர். பவீந்திரன் - 05 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தர வரிசை பட்டியலுக்கு திருநெல்வேலி சி.சி அணி 8.27 புள்ளிகளையும் சிறிகாமாட்சி 2.46 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

## இன்றைய போட்டி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படுகின்ற இல்ல விளையாட்டு போட்டிகளின் வரிசையில் கரம் போட்டி இன்று புதன்கிழமை நிலையஉள்ளகஅரங்கில் நடைபெறவுள்ளது என போட்டிக்குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருகுலராசா...

த்தில் வைத்து தனது இராஜினாமா கடிதத்தை அவர் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராக நடைபெற்ற ஊழல் மோசடி விசாரணையை தொடர்ந்து விசாரணை குழுவினால் குற்றம் சாட்டப்பட்ட இரு அமைச்சர்களான வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோரை. தாமாகவே தமது பதவிகளை தியாகம் செய்யுமாறு கடந்த 14ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வில் கோரியிருந்தார்.

அத்துடன் அவர்களது இராஜினாமா கடிதங்களை 48 மணி நேரத்துக்குள் ஒப்படைக்குமாறும் அறிவிப்புச் செய்திருந்தார்.

அந்தவகையில் கடந்த 15ஆம் திகதி மாலை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தனது பதவியை இராஜினாமா செய்வதாக இராஜினாமா கடிதத்தை முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் வைத்து முதலமைச்சரிடம் கையளித்தார். எனினும் கடந்த சில நாட்களாக வடக்கு மாகாண சபை அரசியலில் ஏற்பட்ட குழப்ப நிலையை தொடர்ந்து,

விவசாய அமைச்சருடன் பதவி விலகுமாறு முதலமைச்சரால் கோரிக்கை விடப்பட்ட வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா தனது இராஜினாமா கடிதத்தை முதலமைச்சரிடம் கையளித்திருக்கவில்லை.

இந்த நிலையில் வடக்கு மாகாண அரசியலில் நேற்றுமுன்தினம் சமரச நிலை ஏற்பட்டதனை தொடர்ந்து நேற்றைய தினம் தனது இராஜினாமா கடிதத்தினை கையளித்திருந்தார். அவரது பதவி விலகல் கடிதம் வருமாறு.

மாண்புமிகு முதலமைச்சர்,

வடக்கு மாகாண சபை, கைதடி.

தாமாகவே பதவி விலகல்

கடந்த 2017.06.14இல் நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் தங்களால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட விவசாய அமைச்சராக பதவி வகித்த ஐங்கரநேசன் அவர்களையும், எனது பதவியையும் தியாகம் செய்து தாமாகவே பதவியில் இருந்து விலகுமாறு கோரியிருந்தீர்கள். இன்று வரை எனது இராஜினாமா கடிதம் தங்களுக்கு வழங்க முடியாததையிட்டு மனம் வருந்துகின்றேன்.

அதேவேளை என்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவும் திட்டமிட்டு செய்யப்பட்டவை என்பதுடன் அதற்கு என்னை எவ் விதத்திலும் பொறுப்பாக்க முடியாது என்பதை உறுதியாக நம்புகின்றேன்.

என்னை மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்த மக்களிற்கும் அமைச்சராக தெரிவு செய்த தங்களுக்கும் நான் ஒரு போதும் துரோகம் செய்ய எண்ணவில்லை. எனவே என் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை குற்றம் அற்றவை என நான் நிரூபிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எனது தன்னிலை விளக்கத்தினூடாக சுத்தவாளி என்பதை நன்றாகவே ஆதாரங்களுடன் விளக்கியு ள்ளேன். தாங்கள் என்னுடைய இந்த தன்னிலை விளக்கத்தினை படித்திருக்கலாம் அல்லது மேல் எழுந்தவாரியாக அதனைப் பார்வையிட்டிருக்கலாம். தன்னிலை விளக்கம் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பலரது கவனம் அவ் விளக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டு என் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் குற்றங்கள் அல்ல என்பதை எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தனர். நான் இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிப்பதனால் என் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டது போல் ஆகி விடும் என்கின்ற குற்ற உணர்வுடன் அமைச்சர் பதவியை துறக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளேன். தாங்கள் சட்டரீதியான சுயாதீனமான ஏற்றுக்கொள்ளக் கூடிய மேன்முறையீட்டுக்குழு ஒன்றை நியமிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளீர்கள். இதன் அடிப்படையிலேனும் எனது தன்னிலை விளக்கத்தினூடாக எனது குற்றத்தைக் கழுவி எனது மாசின்மையை எனக்கு ஆணை வழங்கிய மக்களுக்கு தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

சமரச முயற்சியின் ஊடாக தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் தளம்பல் நிலை ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த வேளையில் எனது கட்சியின் எதிர்கால நலனுக்காவும் சமரசத்தை ஏற்றுக்கொள்கின்றவன் என்கிற முறையிலும் இன்றிலிருந்து வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் பதவியில் இருந்து விலகிக் கொள்கின்றேன் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன் என குருகுலராசா தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மனி.உரி.கண்கா...

ள்ளது.

இது தொடர்பாக, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே, இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அண்மையில் நடைபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில், கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல் குறித்து சட்டத்தரணி லக்ஷான் டயஸ், தெரிவித்த கருத்துக்களுக்காக அவர் மன்னிப்புக் கோராவிட்டால் நீதித் தொழிலிருந்து வெளியேற்றவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் கிறிஸ்தவரகள் மீதும் அவர்களது வழிபாட்டிடங்கள் மீதும, சுமார் 200 தாக்குதல்களும் துன்புறுத்தல்களும் இடம்பெற்றதாக தேவாலயங்களின் குழுவொன்று வெளியிட்ட அறிக்கையை சட்டத்தரணி டயஸ், குறிப்பிட்டுக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளரான பிரட் அடம்ஸ், பெருமளவிலான ஆபத்தில் காணப்படும் இலங்கையர்களுக்காக எதிர்த்து நிற்கும் சட்டத்தரணியான லக்ஷான் டயஸை ஒடுக்குவதற்கு நீதியமைச்சர் ராஜபக்ஷ எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தால் விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

டயஸின் சட்டத்தரணி அனுமதிப்பத்திரத்தை இல்லாது செய்யப்போவதாக மிரட்டுவதன் மூலமாக அவரிலும் ஏனைய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களிலும் தங்கியிருக்கும் ஆபத்தான நிலையில் உள்ள அத்தனை குழுக்களையும், அரசாங்கம் அச்சுறுத்துகிறது என்று தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், பாதிக்கப்பட்ட சமூகத்தின் சார்பாக உரையாற்றிய மனித உரிமைகள் சட்டத்தரணியின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யப் போவதாக, நீதியமைச்சர் விடுத்த எச்சரிக்கை தொடர்பாக, அரசாங்கம் எதுவும் செய்யாமலிருப்பது, இலங்கைக்கு வெளியேயும், அதிர்வலைகளை ஏற்படுத்தும். அரசாங்கத்தின் எதிர்வினையை, உற்றுநோக்கிக் கொண்டிருப்பதை, இலங்கையின் நண்பர்கள உணர வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (செ-11)

## குற்றமிழைத்த...

மக்களைக் கடத்தி கொலை செய்வதற்கு இலங்கை இராணுவச் சிப்பாய்களுக்கு அனுமதி வழங்கியது யார் என்றும் கேள்வி எழுப்பினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதை அடுத்து உயிர் அச்சுறுத்தலினால் நாட்டைவிட்டு வெளியேறிய ஊடகவியலாளர் போத்தல ஜயந்த 8 வருடங்களுக்குப் பின்னர் நாடு திரும்பிய நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தார்.

தன்னைக் கடத்தி தாக்கிய நபர்களுக்கு எதிராக கடந்த 8 வருடங்களாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காததினால் நாடு திரும்பிய நிலையில் இன்றைய தினம் இந்த முறைப்பாட்டை செய்வதாக ஊடகவியலாளர் போத்தல ஜயந்த தெரிவித்தார்.

நான் கடத்தப்பட்டு 8 வருடங்களாகின்றன. எனினும் கடத்தல் மற்றும் சித்திரவதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் இதுவரை அர்த்தபுஷ்டியான விசாரணை எதுவும் இடம்பெறவில்லை. 2010ஆம் ஆண்டு டிசம்பரில் உயிராபத்து இருந்ததால் நாட்டை விட்டு வெளியேறினேன். அதுமுதல் தொடர்ச்சியான அழுத்தம்மூலம் பொலிஸ்மா அதிபர் உட்பட உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே நாட்டிற்கு வந்துள்ள நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வந்து என் மீதான சம்பவங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தும்படி கோரிக்கை விடுத்துள்ளேன். எனது எழுத்துமூல கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், பொலிஸ்மா அதிபரின் அனுமதியின்றி விசாரணையை ஆரம்பிப்பது கடினம் என்று பதிலளித்தனர். எவ்வாறாயினும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் எனது கோரிக்கை கடிதத்தை ஏற்றுக்கொண்டதோடு அதனை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்பில் விசாரணை நடத்தவும், சமூக கருத்துக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் விசேட ஆணைக்குழு ஒன்றை அமைக்கும்படி தற்போது அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை பதில் தெரிவுக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். ஊடக நண்பர் கீத் நொயரின் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவினர் என்மீதான தாக்குதலுடனும் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சாதாரண சந்தேகம் எனக்கு வந்துள்ளதை முறைப்பாட்டில் கூறியுள்ளேன். நுகேகொடை பொலிஸாரினால் சாட்சியங்கள் வெளிக்கொணர முடியாத படியினால் என் சார்பாக வழக்கு விசாரணை நிறுத்தப்பட்டுள்ளது. நான் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த ஆடை, என்னிடம் இருந்த விடயங்கள் மன்றில் ஒப்படைக்கப்பட்டதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. எனினும் இந்தக் குற்றச் செயலுக்காக நட்டஈட்டை வழங்கி நழுவிச் செல்ல வேண்டாம் என்று அரசாங் கத்திற்கு கூற விரும்புகிறேன் என்றார்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்காக நீதிகோரி குரல் எழுப்பப்பட வேண்டும் என்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் போத்தல ஜயந்த வலியுறுத்தினார்.

என்னைப் பற்றியும், லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட, கீத் நொயர் ஆகியோரைப் பற்றி அரசியல் மேடைகளிலும் பல இடங்களிலும் பரவலாக பேசுகின்றனர். ஆனால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் 40 பேர்வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து எவரும் பேசுவதில்லை. எனக்காக இங்கு சிலர் கூடியிருக்கின்ற போதிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் சார்பில் எங்கே குரல்கொடுக்கின்றனர்? அவர்களுக்காகவும், இழக்கப்பட்ட அந்த உயிர்களுக்காகவும் குரல் எழுப்பப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தினரால் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அந்த இராணுவத்திலுள்ள சிலர் மக்களை கடத்துகின்றனர், கொலை செய்கின்றனர். விடுதலைப் புலிகளை தோற்கடித்த மற்றும் யுத்தத்தை வென்ற ஒரே காரணத்திற்காக அவர்களை விடுதலை செய்ய முடியுமா? அப்படி செய்ய முடியாது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததால் இராணுவத்தினர் செய்த குற்றங்களை மறைக்க முடியுமா? அவ்வாறு செய்ய அனுமதி வழங்கியது யார்? மக்களைக் கடத்தி கொலை செய்வதற்கு இராணுவத்தினருக்கு வழங்கிய அனுமதிதான் என்ன? அவர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தக் கடத்தல், கொலைகளைச் செய்யவில்லை. அரசியலிலுள்ள பலம்படைத்த சிலரது தேவைக்காகவே இதனை புரிந்துள்ளனர் என்றும் போத்தல ஜயந்த தெரிவித்தார். (செ-11)

## முதலமைச்சர்...

பரிந்துரையின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட இரு அமைச்சர்களான வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் கல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோரை, தாமாகவே தமது பதவிகளை தியாகம் செய்யுமாறு கடந்த 14ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வில் கோரியிருந்தார்.

அதன்படி கடந்த 15ஆம் திகதி விவசாய அமைச்சரும் நேற்றைய தினம் கல்வி அமைச்சரும் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த அமைச்சுக்களுக்குரிய புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படாத காரணத்தினால் குறித்த அமைச்சுக்களை தற்காலிகமாக இன்றைய தினம் மாலை 3 மணிக்கு வட மாகாண ஆளுநர் ரெஜினோல் கூரே முன்னிலையில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்கிறார். (செ-9)

## விக்னேஸ்வரனு...

முஸ்லிம் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மௌலவி அஸீஸ் காசிமி தலைமையில் வடக்கில் உள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்குமான நல்லெண்ண சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் யாழ்.முஹமதியா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அக் கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபை வினைத்திறனாக இயங்க வேண்டும் எனில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ந்தும் தனது சேவையை முன்னிறுத்த வேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட அரசியல் பிளவுகள் துரதிஸ்டவசமானவை, அரசியல் ரீதியாக பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை அவர்களே தீர்த்துக்கொள்வார்கள், ஆனால் சமூக ரீதியில் நாம் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் அதற்கு நீதியுள்ள மனிதரான முதலமைச்சர் தான் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் சேவை புரிய வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் அனைத்து மக்களிடத்திலும் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் எனில் முதலமைச்சரின் நீதியான அணுகு முறை அனைவருக்கும் பாடமாக அமைய வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் வடக்கு முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், இஸ்லாம் சமய பிரதிநிதிகளுடனான நல்லெண்ண சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தேன். நாம் கிறிஸ்தவ மற்றும் இந்து மத தலைவர்களுடன் பேசிவந்தோம்.அதே போன்று இஸ்லாம் மத தலைவர்களுடனும் பேச வேண்டிய கட்டாயம் இருந்தது அதனடிப்படையில் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளோம்.

மக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு அந்த முரண்பாடுகள் தீர்க்கமடையும் போது சில பிரச்சினைகள் தோன்றும், அந்த தருணத்தில் சமய சமூக பெரியார்களுடன் பேசி அவர்களின் நல்லெண்ண கருத்துக்களை பெற்றுக்கொள்வது வழக்கம்.

அதன்படி இச் சந்திப்பில் எமக்கு முழுமையான ஆதரவை தருவதாக கூறியுள்ளார்கள் அது தனிப்பட்ட முறையில் இல்லாமல் வடக்கு மாகாண சபை நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். அதன்படி மக்களின் சேவைகள் சரியாக முறையாக செய்து கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பொது பல சேனா...

தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் உறுப்பினர் ஜபுரேவல சந்தரதன தேரர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அண்மையில் வடமாகாண சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது. அங்கு அமைச்சர்கள் இருவரை பணி நீக்கம் செய்ததோடு, இருவரை விடுமுறையில் வடக்கு முதல்வர் அனுப்பிவைத்தார்.

இங்கு எத்தகைய கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் தமிழர்கள் என்ற ரீதியில் அவர்கள் அந்த பிரச்சினையை ஒற்றுமையாக எதிர்கொண்டார்கள்.

தமது பலவீனங்களை வெளிப்படுத்தவில்லை. தமிழர் என்ற ரீதியில் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தினர். இந்த விடயம் சந்தோசத்தை தருகின்றது. அதற்காக அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

அதேபோல முஸ்லிம் மக்களும் இந்த நாட்டில் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு வருகின்றனர். ஆனால் பௌத்த இனத்திடையே மட்டுமே ஒற்றுமை இல்லாது காணப்படுகின்றது.

நாட்டில் பௌத்தம் இப்போது அழிக்கப்பட்டு வருகின்றது. இப்போதைய அரசு அதற்கு இடம் கொடுத்து கொண்டே வருகின்றது.

பொய்யான குற்றச்சாட்டுக்களைப் பரப்பி பிக்குகளைத் தண்டிப்பதை மட்டுமே இப்போதைய அரசு செயற்படுத்திக் கொண்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## வடக்கு சபை...

நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராக நடைபெற்ற ஊழல் மோசடி விசாரணையை தொடர்ந்து விசாரணைக் குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சரின் தீர்மானத்தை அறிவிப்பதற்கான சிறப்பு அமர்வு கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது.

முதல்வரின் தீர்மானத்தை அடுத்து அன்றைய தினமே வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை வடமாகாண ஆளுநரிடம் சமர்ப்பித்தனர்.

இதனால் பாரிய குழப்ப நிலை வடக்கு அரசியலில் ஏற்பட்டது. பாரிய மக்கள் போராட்டங்கள் அரசியல் சிக்கல்களின் பின்னர் பலரின் சமரச முயற்சியில் நேற்றுமுன்தினம முதலமைச்சர் தொடர்பான விவகாரம் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில் அமைச்சரவை விவகாரம் தொடர்பில் நாளைய அமர்வில் விவாதிக்கப்படும் என கடந்த அமர்வில் அவைத்தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சபை அமர்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி வீட்டுச் சங்கம்

### அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் சட்ட ஆலோசகராக நான் தற்போது செயலாற்றவில்லை என்பதை கைதடி வீட்டுத் திட்ட அங்கத்தவர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**இப்படிக்கு:**

**தம்பையா வேலாயுதம்**

சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், சத்தியப்பிரமாண ஆணையாளர்.

கோண்டாவில்.


### இரா.அதிகாரிகள்...

இராணுவ புலனாய்வு அதிகாரிகள் ஆறு பேர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவர்கள் ஆறு பேரையும் பிணையில்விடுதலைசெய்ய கொழும்பு மேல் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகள் முடியும் வரையில். இராணுவம் இவர்களை சேவையில்இருந்து இடைநிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

### டெங்...

லியாவில் பயன்படுத்தப்படும் பக்டீரியா வகையொன்றை இலங்கையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் டெங்கு காய்ச்சலை பரப்பும் நுளம்புகளை அழிக்கக்கூடிய பக்டீரியா வகையொன்று அவுஸ்திரேலியாவில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த பக்டீரியாவை இலங்கைக்கு கொண்டுவந்து பரப்புவதன் மூலம் டெங்கு நோயை பரப்பும் நுளம்புகளை அழிக்கமுடியும் என கூறியுள்ள அமைச்சர் சேனாரத்ன, இதனை பெற்றுக்கொள்வது குறித்து அவுஸ்திரேலிய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

டெங்கு நோய் காரணமாக கடந்த ஐந்து மாதங்களுக்குள் 200 பேர்வரை இறந்துள்ளதாக கூறிய அமைச்சர் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (செ-11)

### பஸ்...

ரவை அனுமதியளித்துள்ளது.

குறித்த கட்டணங்கள் 6.28 வீதத்தால் அதிகரிக்கவுள்ள நிலையில்.

குறைந்தபட்ச பஸ் கட்டணம் 9 ரூபாயில் இருந்து 10 ரூபாயாக உயர்வடையவுள்ளது.

மேலும், குறித்த கட்டண அதிகரிப்பு ஜூலை முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-11)


## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




**CNR World Wide Express**
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

(சி-8829)

## பதவிக்கான தேடல் Dynamic

எமது நிறுனத்தின் புதிய கிளைகளுக்கான பதவித் தேர்வுகள் ஆரம்பமாகிவிட்டன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.

- O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
- தங்குமிடம், உணவு இலவசம்
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (20பேர் மட்டும்)
- அடிப்படை சம்பளம் 15,000/-

**தொடர்பு : 0766781042, 0775566226**

## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு உத்தரவாதம்

*Condition apply

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



16th Batch start on :- 24.06.2017

iCS EDUCATION
77. மணிக்கூட்டு கோபுர வீதி (பெருமாள் கோவில் அருகாமையில்) யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## வாடகைக்கார்

புதிய திருமணக்கார் நாளொன்றுக்கு 8000/- மட்டும்.

கார், பலூன் A/C பஸ் இரண்டும் நாளொன்றுக்கு 20,000/- மட்டும்

**077 833 1414**

(9498)

## உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS




**விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை**



நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)
தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
நேர்முகத்தேர்வு - 21-06-2017 புதன்கிழமை காலை 10 மணி
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) **0768226236**

## பணியாளர் தேவை

எமது வியாபார ஸ்தாபனங்களான நியூ நகுலா ஜுவல்லறி, நியூ லலிதாஸ் ஜுவல்லறிக்கு பணியாளர்கள் தேவையாகவுள்ளது.

1. விற்பனையாளர்கள் (ஆண்)
2. கணக்குப் பதிவாளர்கள் (ஆண்)
3. உதவியாளர்கள் (ஆண்)

O/L, A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு:**
**இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இல: 021 222 5511**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் மகேசு தங்கரத்தினம்**

வையகத்தில் : 1952.01.09

வானகத்தில் : 2017.05.22

கடந்த 22.05.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் மகேசு தங்கரத்தினம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் இருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், பத்திரிகை, துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர் வளையம், மலர் மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மரண அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரித்த பாடசாலை சமூகத்தினருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கிய யா/மாதனை மெ.மி.த.க பாடசாலை, யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை, அகில இலங்கை இளங்கோ கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆலய பரிபாலன சபையினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய அதிபர், ஆசிரியர்கள், இளங்கோ கழகத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய தினம் 21.06.2017 புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**துன்பளை, பருத்தித்துறை.**

**இங்ஙனம்: குடும்பத்தினர்**

(சி-8840)

## தனியார் கல்வி நிலையம் - சங்கானை

### ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம்

**தகைமை :- உயர்தரக் கல்வி கற்றவர்கள்**




| பாடங்கள் | 6 – 11 வரை |
|---|---|
| தமிழ் | - A/L தமிழ் |
| கணிதம் | - A/L கணிதம் |
| விஞ்ஞானம் | - A/L உயிரியல் |
| சமயம் | - A/L தமிழ் |
| ஆங்கிலம் | - கற்பிக்க விரும்புவோர் |
| சுகாதாரம் | - A/L |
| வரலாறு | - A/L |
| சுற்றாடல் | - A/L |
| வர்த்தகம் | - A/L |




தரம் 1 - 5 வரை உள்ள பாடங்கள் கற்பிக்க விரும்புவோர் [G.C.E (O/L), A/L]

விண்ணப்பதாரிகள் உங்கள் சுயவிபரங்களை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பவும். (20.06.2017 - 30.06.2017)

முகவரி
தனியார் கல்வி நிலையம், சங்கானை.
ச.இராசரத்தினம்,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

தொலைபேசி இலக்கம் : 0778522949

(சி-8844)

## Wanted

உலகளாவிய ரீதியாக இயங்கிவரும் Everest கம்பனியானது தனது கிளைகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் விஸ்தரிக்கவுள்ளது. எனவே பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாளர்கள் கோரப்படுகின்றனர்.

- Administration Workers
- Stock Keepers
- Supervisors
- Assistant Managers
- Managers

- நிரந்தர வேலைவாய்ப்பு
- EPF, ETF, Medical போன்ற வாய்ப்பு
- குறுகிய காலத்தில் பதவி உயர்வு
- ஊக்குவிப்பு சம்பளம்
- பயிற்சியின் போது 15,000 - 20,000 வரையிலான சம்பளமும் பயிற்சி முடிவின் போது 40,000ற்கு மேல் சம்பளமும்.

**தகைமைகள் : O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள்**

இந்நிறுவனத்தின் நேர்முகத் தேர்வானது 21,22,23 ஆம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

**தொடர்பு : 0217223317, 0775179034**

179, Hospital Road, Jaffna.

(9512)

## V2 TRAVELS

விமான பயணச்சீட்டுக்கள்
விரைவு பொதிகள் சேவை
விசா சேவைகள்

**முகவர்கள் தேவை**

நேர்முகத்தேர்வு 21-06-2017 புதன்கிழமை மதியம் 2 மணி

**0774836084**

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.